DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1497
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday December 13, 2024

# நாளை 14ம் திகதி சனிக்கிழமை தனது 28வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் 'கனடா உதயன்' பத்திரிகை

## சென்னையிலிருந்து கனடா நோக்கிப் பயணமாகின்றார் விழாவின் சிறப்புப் பேச்சாளர் கரு பழனியப்பன் அவர்கள்

நாளை சனிக்கிழமை 14ம் திகதி கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ள "உதயன்" பத்திரிகையின் 28வது ஆண்டு விழாவில் நமது உள்ளூர்க் கலைஞர்கள் வழங்கும் நடனம் நாடகம் மற்றும் இசை ஆகியன இடம்பெறவுள்ளன. அத்துடன் இதே மேடையில் சிறப்புரையாற்றவும் தனது ரசிகர்களைச் சந்திக்கவுமாக இந்த பயணம் கனடா உதயன்பத்திரிகை நிறுவனத்தினால் ஒழுங்குபடுத்தப்பெற்ற பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தொகுப்பாளரும் திரைப்பட இயக்குனருமான கரு பழனியப்பன் இன்று வெள்ளிக்கிழமை கனடா வந்தடையவுள்ளார்.




இங்கே காணப்படும் படத்தில் கனடா உதயன் சென்னைச் செய்தியாளர் அருண் கதாகரன் அவரை நேற்று வியாழக்கிழமை சென்னை விமான நிலையத்தில் வழியனுப்பி வைப்பதைக் காணலாம்.



எதிர்வரும் 14-12-2024 சனிக்கிழமையன்று ஸ்காபுறோ கென்னடி கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் இராப்போசன விருந்துடன் நடைபெறவுள்ள உதயன் பல்சுவைக் கலை விழாவில் கலந்து உரையாற்றவுள்ள தமிழ்நாட்டின் ஜனரஞ்சகப் பேச்சாளரும் சிறந்த இலக்கியவாதியும் திரைப்பட இயக்குனருமான கரு பழனியப்பன் அவர்களின் வருகையை ஒட்டி ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றை முற்கூட்டியே அனுப்பி வைத்துள்ளார்..
அவருக்கும் அவரது அலுவலகத்தின் மக்கள் தொடர்புகள் பிரிவின் நண்பர்களுக்கும் கனடா உதயன் பத்திரிகை நிறுவனம் தனது நன்றியைத் தெரிவிக்கின்றது.

விழாவிற்கான அனுதிச்சீட்டுக்களுக்கு 416.732.1608 அல்லது 647.891.7725 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்.
(உள்ளே விழா தொடர்பான விளம்பரத்தைப் பார்க்கவும்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851


அச்சு ஊடகங்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொண்டு
கனடாவில் தொடர்ச்சியாக வெளிவரும்
உதயன்
UTHAYAN
உதயன் பத்திரிகையின் 28வது ஆண்டு
பல்சுவைக் கலைவிழாவும்
நிதி சேர் இராப்போசன விருந்தும் . . .
CANADA UTHAYAN's
28th Cultural Festival & Dinner Gala
Toronto Voice Of Humanity
DEC. 14th 2024
தமிழா தமிழா
Guest Speaker from South India,
Film Director and Television Moderator
Mr. Karu Palaniyappan
சிறப்பு சொற்பொழிவாளராக, திரைப்பட இயக்குனரும்,
தொலைகாட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளருமாகிய
கரு பழனியப்பன்
கலந்து கொள்கின்றார்.
அத்துடன், இசை, மற்றும் நடனங்கள்
இடம்:
Kennedy Convention Centre
1199 Kennedy Road, Scarborough
(Near Lawrence Ave.)
காலம்:
14-12-2024 சனிக்கிழமை
நேரம்: 6:00 PM
For Tickets and Information: (416) 732-1608 or (647) 762-9512
PRESENTING SPONSOR
K T GROUP
PRESIDENT & CEO
MR. KANA SELVA
647302 1189
Commercial Cleaning
Security Services
Employment Services
Restoration Services
AAROSAI
"WHERE MUSIC BEGINS..."
கனடாவில் புகழ்பெற்ற இசைக்குழுவான ஆரோசையின்
இசையில் இனிய பாடல்களை கேட்டு மகிழுங்கள்
Gold Sponsors
VIBRANT HOSPITALITY GROUP
Latika Gold House
COMPUTEK COLLEGE
Chapel Ridge
CTS BUILDING SUPPLIES LTD
"providing the highest customer service"
416 840 4538
www.ctsbuildingsupplies.com
733 Progress Ave, Scarborough, On. M1H 2W7
Ontario approved Pawn Brokers
KANAGAAMBIKAI PAWN BROKERS
Tel:- 416 269 7198
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2
NAMMA KADAI BIRYANI
(647) 705-0969
PRIME LEGAL SERVICES
905-334-6851
Vijaya Jewellery
SANTHA
Santha
Tel: 416-200-5470
info@santha.ca
www.santha.ca
வீடு வாங்க விற்க
Excel Realty Ltd., Brokerage
Raj Nadarajah
Sales Representative
Dir: 416.333.6115
CROSSROAD
SHUTTLE BUS SERVICES
www.crossroadshuttles.com
647-801-7725
AMMA PAWN BROKER
அம்மா நகை அடைவு மையம்
CASH FOR GOLD
416-757-0034
BUY | SELL | INVEST
RAJEEV SEBARASHA
Dir: 905.226.8515
Residential & Commercial Real Estate Services
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX
MAHAANS
PICK & PRESS OIL MILL
Make Someone Smile
www.babuflorist.ca
BABUFLORIST LTD
வீடு வாங்க விற்க
Baskaran Sinnadurai
Broker
RE/MAX ACE
416 880 8585
1286 Kennedy Rd,Unit 3
Toronto, ON. MIP 2L5
BAVAN LOGA
Travel Advisor
BAVAN TRAVEL AND TOURS
POWERED BY CENTRE HOLIDAYS
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519
STANDARD MORTGAGES INC.
RAJ SUBRAYAM
THE GUARDIAN
Sutharsan Nadarajan
416 - 989 - 6565
JRB
R.R.Rajkumar
647-289-6164
N.K.S DRAPERY & BLINDS FABRIC
KETHA
416.321.8420
INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal · Corporation · New Home HST Filing
Selva Vettyvel
416 568 4301
905 471 4050
204-7 Eastvale Dr, Markham ON, L3S 4N8
First Mortgage
Second Mortgage
Private Mortgage
Commercial Mortgage
Mortgage Renewals
Home Equity Line of Credit
Dir: 416-908-3636 T. NENAN
ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel: 647-344-6600
SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE
CASH RUSSH
4049 Sheppard Ave. E
Scarborough, ON, M1S 1S8
Jeya Jeyakanthan
Sales Representative
LEGAL Think Tank
Tom Thiru
Think Tank Legal Services Corp.
2115-1585 Markham Road,
Toronto, ON M1B 2W1
Cell: 416-726-7748
Tel: 647-666-7748
Email: tom.tbond@gmail.com
Tamil One
East FM 102.7
time FM
Radio Partner
தேசம்
உலகத்தமிழர்
GTA VIDEO ENTERTAINMENT

Canada

We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# யாழ் — மாவட்டத்தில் மழையும் வெள்ளமும் ஏற்படுத்திய தாக்கத்திற்கு அப்பால் தங்கள் உயிர்களையும் இழந்துள்ள அப்பாவிகளான எட்டு உறவுகள்!

வாரா வாரம் எமது கதிரோட்டத்தை நாம் வடிப்பதற்கு நம்மைச் சுற்றி இடம்பெறும் நல்லவை. நல்லது அல்லாதவை மற்றும் முக்கிய அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்கள் என பலவும் எமக்கு கைகொடுத்து நிற்பதை நாம் மகிழ்ச்சியுடன் இங்கு பதிவு செய்கின்றோம். வழமை போன்ற இவ்வாரம் எதை எழுதுவது என்பதை தீர்மானிக்க முடியாத ஒரு சூழ்நிலை. கனடாவிலும் நம் தாய் மண்ணிலும் தமிழ்நாட்டிலும அதற்கு மேலாக உலகெங்கும் பல சம்பவங்களும் பிரச்ச்னைகளுமாக. எமக்கு முன்பாக வந்து குவிந்தன.

இவவாறான சந்தர்ப்பத்தில் முகநூலில் ஒரு முக்கியமான பதிவு. அதுவும் நமது தாய் மண்ணில் தாண்டவமாடும் நோயின் தாக்கத்தினால் எட்டுப் பேர் உயிரிழந்த சம்பவங்கள் அங்கு வைத்திய துறைக்கே சவாலாக உள்ள நேரத்தில் உள-வியல் ரீதியாக ஆறுதலைத் தரவல்ல ஒரு எழுத்துப் பதிவை வாசிக்க சந்தர்ப்பம் கிட்டியது.

அந்த முகநூல் பதிவை வடித்திருந்தவர் யாழ்ப்பாண மண்ணில் வாழும் ஒரு பெண் எழுத்தாளர்

உடுவிலூர்க் கலா என்னும் சமூக நோக்குள்ள படைப்பாளி. எமது உதயன் வாசகர்களுக்கும் அவரது பெயர் அறியப்பெற்ற ஒன்றாக இருக்கும்.

இந்த படைப்பாளியின் கவனம் யாழ்ப்பாணத்தில் மழை, வெள்ளம் போன்றவற்றால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு அப்பால் எட்டு உயிர்களை நமது உறவுகள் பறிகொடுத்த அந்த சம்பவம் அவரது மனதைப் பாதித்துள்ளதை நாம் கவனித்தோம்.

எனவே அவரது எழுத்துக்களையே, இவ்வாரக் கதிரோட்டத்தின் முக்கிய கருவாக சேர்த்துக்கொண்டோம். ஏனென்றால் எமது மண் யுத்தத்தின் பாதிப்புக்களிலிருந்து இன்னும் விடுபடாத நிலையில் மழையும் வெள்ளமும் அந்த மண்ணின் மக்களை இன்னும் "கொன்று" பதம் பார்ப்பதும் கொடுமை தான்.!

இதோ எழுத்தாளர் உடுவிலூர்க் கலா அவர்களின் எண்ணங்களைப் படியுங்கள்.!

"மழையின் தாக்கத்தில் இப்போது நாங்கள் உள்ளோம்.தொடர்மழை காரண-மாக யாழில் ஒருவகைக் காய்ச்சல் பரவுகிறது.இது என்ன காய்ச்சல் என உறுதிப்படுத்தப் படாத போதிலும் எலிக்காய்ச்சலாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து பெருகும் நுளம்பும் கூட நமக்கு ஆபத்துத் தரக் காத்திருக்கின்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இதுவரை எட்டுப்பேர் இக்காய்ச்சலால் மரணடைந்துள்ளனர்.நோயின் தாக்கத்திற்குள்ளாகியும் பலர் உள்ளனர்.

இந்நோயானது ஆடு மாடு நாய் பூனை போன்ற இன்னோரன்ன விலங்கினங்களின் கழிவுகளால் அவை மழைநீரோடு அடித்துச் செல்லப்பட்டு கிருமிகள் பெருகி வெள்ளங்களில் நடக்கும் போது சிறுவர்கள் வெள்ளநீரில் விளையாடும்போது உட்சென்று நோயை ஏற்படுத்துகிறது.

மழையின் அனர்த்தம் எல்லோருக்கும் பொதுவானது.நம்மைப் பாதுகாப்பது நமது கடமை.காலத்தின் தேவையறிந்து

நமக்கும் நம்மைச் சூழ்ந்தவர்களுக்கும்

பாதுகாப்பை உறுதி செய்வது கட்டாயமாகும்.

நீரைக் அதிக வெப்பத்தில் கொதிக்க வைத்துக் குடிக்க வேண்டும்.

வெள்ளத்தில் சிறுவர்கள் விளையாடுவதை அறவே தவிர்க்க வேண்டும்.

பெரியோரும் கூட காரணமின்றி வெளிச்செல்வதைத் விடுத்து தத்தம் குடும்ப உறவுகளைப் பாதுகாக்க ஒத்துழைக்க வேண்டும.

வெளியே சென்று வருபவர்கள் யாராக இருந்தாலும் நன்கு தம்மைச் சுத்தப்படுத்தி உள்ளே செல்ல வேண்டும்.

(தொற்று நீக்கிகள் மூலம்)

இது ஒரு சுவாச நோய் என்பதால் கயஉந அயளம அணிந்து செல்வது சிறந்தது.

யாரோடும் முகத்துக்கு நேரே தொடர்பு கொள்வது கட்டாயம் கூடாது.

உடலில் காயங்கள் புண்கள் இருந்தால் அவற்றை மாற்றிவிட வேண்டும்.

காயங்கள் உள்ளவர்கள் வெள்ளத்தில் நடப்பது தவிர்க் வேண்டும்.

கொதித்தாறிய நீரையே பருக வேண்டும்.

(பொதுவாகவே,நீரைக் கொதிக்க வைத்துக் குடிக்க வேண்டும் என்பது சுகாதார விதிமுறை.ஆனால் நம்மில் பெரும்பாலானவர்கள் அதனை விரும்புவதில்லை.)

காய்கறிகளை நன்கு கழுவிச் சுத்தப்படுத்திச் சமைக்க வேண்டும்.

(சுத்தப்படுத்த உப்பு வினாகிரி சுடுநீர் என்பன பயன்படுத்தலாம்)

காய்ச்சல் ஒரு நோயல்ல.ஏதோஒரு நோயின் அறிகுறியே.ஆகவே,உடல் வெப்பத்தை உணரும் பட்சத்தில் உடனடியாக அரச மருத்துவ மனைகளை நாட வேண்டும்.

தனியார் மருத்துவ மனைகளையோ மருந்துக் கடைகளையோ தேடிச்சென்று மருத்தவநிவாரணம் பெறுவதை முற்றிலும் தவிர்க வேண்டும்.

முடிந்தவரை தனிமைப் பட்டு இருப்பது நமக்கும் ஏனையோருக்கும் நல்லது.

மலசலகூடங்களை சரியாகக் கையாள வேண்டும்.தினமும் கிருமிகொல்லிகள் மூலம் சுத்தப்படுத்தவேண்டும்.

தனிநபர் சுகாதரத்தை கடைப்பிடிப்பது சாலச்சிறந்தது.

- தமிழோடு உடுவிலூர்க் கலா

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

Ontario

## KARU PALANIAPPAN
## WELCOME TO ONTARIO!
### 28th Uthayan Cultural Night

**December 14, 2024**

Karu, on behalf of the Government of Ontario,
I am pleased to give you a warm welcome!

Our province is proud to be home to many Ontarians with Tamil roots whose rich traditions, skills and hard work have contributed much to this great province. Many thanks to Canada Uthayan for giving a much-admired actor, filmmaker and television moderator this occasion to connect and engage with this large and vibrant community.

Karu, I know that your presence in this event will bring Tamil Canadians together and give them an opportunity to be inspired by your experiences and wisdom.

To everyone, have a wonderful evening!

**Doug Ford**
**Premier**





# பிரித்தானிய முதன்மைச் செயலாளர் – யாழ்ப்பாண அரசாங்க அதிபர் சந்திப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



பிரித்தானியத் தூதரகத்தின் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைக்கான முதன்மைச் செயலாளர் திரு. ஹென்றி டொனாடி அவர்கள், 11-12-2024 அன்றைய தினம் காலை 08.45 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்களை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரதேச மற்றும் ஆதார வைத்தியசாலைகளுக்கு தேவையான வைத்திய உபகரணங்களின் தேவைப்பாடுகள் உள்ளதாகவும் அதற்கான உதவிகளை வழங்குமாறும் அரசாங்க அதிபர் கோரிக்கையினை முன்வைத்தார்.

மேலும், இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பாகவும் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் முதன்மைச் செயலாளர் வினாவிய போது, யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு வார காலங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் போல் எதிர்காலத்தில் ஏற்படாவண்ணமிருக்க சீரான வடிகாலமைப்பு முறைகளின் அவசியம் பற்றி தெரிவித்த அரசாங்க அதிபர், வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்தினால் இது வரை ரூபா.50 மில்லியன் நிதி விடுவிக்கப்பட்டது எனவும் இதில் சமைத்த உணவு வழங்கல் மற்றும் உலர் உணவுப் பொருட்கள் விநியோகம் என்பவற்றிற்காக ரூபா.49 மில்லியன் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், ரூபா.1 மில்லியன் உடனடி அனர்த்த தணிப்பு வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்ததுடன், எமது அரசாங்கத்திடம் மாவட்டத்திற்கான தேவைப்பாடுகளை முன்வைத்த போது, நாம் கோரிய நிதி ஒதுக்கீட்டினை சம்பந்தப்பட்ட அமைச்சு விரைவாக விடுவித்தமையானது மகிழ்ச்சியான விடயம் எனவும் அரசாங்க அதிபரால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மீள்குடியேற்ற நிலவரங்கள், அஸ்வெசுமத் திட்டத்தில் பயனாளிகள் தெரிவு முறைமை, வீட்டுத் திட்டங்கள் போன்றவற்றின் விபரங்களை அரசாங்க அதிபரிடம் முதன்மைச் செயலாளர் கேட்டறிந்து கொண்டார். இதன் போது, யாழ்ப்பாண மாவட்ட த்திற்கான வீடமைப்புத் திட்டத்தின் தேவைப்பாடுகளையும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டதுடன் மேலும், மீள்குடியேற்ற வேலைத் திட்டங்கள் முன்னேற்றகரமாக நடைபெற்று வருவதாகவும், நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த காணியற்ற குடும்பங்களுக்கு காணி அரசாங்கத்தின் நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்டு வீடமைப்புத் திட்டமும் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டதுடன், ஒரு நலன்புரி நிலையத்தில் மாத்திரம் இரண்டு குடும்பங்களே தங்கியிருப்பதாகவும் அவர்களுக்கும் காணிக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இம் மாத இறுதிக்குள் அவ் ஒரேயொரு நலன்புரி நிலையமும் மூடப்படவுள்ளதாகவும் அரசாங்க அதிபரால் தெரிவிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பிரித்தானிய தூதரகத்தின் அலுவலர் செல்வி. ப்ராக் வேர்தூஸ் அவர்களும் உடனிருந்தார்கள்.

# மாவீரர் தின நிகழ்வு; கார்த்திகை மலரின் படம் எங்கிருந்து கிடைத்தது என்பது "பொலிஸாருக்கு பிரச்சினை"

## வடக்கில் மாவீரர் தினத்தை ஏற்பாடு செய்த தமிழ் பிரஜை ஒருவரிடம் பொலிஸார் விசாரணை




தமிழ் தேசிய மலராகக் கருதப்படும் கார்த்திகைப் பூ நினைவேந்தலில் பங்கேற்றவர்களுக்கு வழங்கப்பட்ட பாக்கு மரக்கன்றுகள் தொடர்பில் பொலிஸார் விசேட கவனம் செலுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நவம்பர் 27ஆம் திகதி யாழ்ப்பாணம் கொக்குவில் சந்தியில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வின் ஏற்பாட்டாளரை யாழ்ப்பாணப் பொலிஸார் வரவழைத்து டிசம்பர் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுமார் 45 நிமிடங்கள் வாக்குமூலம் பதிவு செய்ததாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மாவீரர் தின நிகழ்வை ஏற்பாடு செய்ய நிதியுதவி வழங்கியது யார், நிகழ்வு ஏற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியது யார் போன்ற கேள்விகளை பொலிஸார் தன்னிடம் கேள்வி எழுப்பியதாக தனது நண்பருடன் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று வாக்குமூலம் அளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமுதன் தெரிவித்தார்.

"யார் இதனை செய்தது? எவ்வாறு ஒழுங்குப்படுத்தினீர்கள்? யார் நிதி உதவி செய்தது? என்று கேட்டார்கள். கார்த்திகை பூ உள்ளிட்ட படங்களை எங்கிருந்து பெற்றீர்கள் எனக் கேட்டார்கள்? நாங்கள் அதனை இன்டர்நெட்டில் எடுத்ததாக சொன்னேன். உங்களுடன் வேறு யார் இணைந்து செயற்பட்டது எனக் கேட்டார்கள். என்னுடைய நண்பர் ஒருவர்தான் உதிவினார் எனச் சொன்னேன்."

அவரது நண்பரிடம் பொலிஸார் வாக்குமூலங்கள் எதனையும் பதிவு செய்யவில்லை என பிரதேச ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர்.

மாவீரர் தின கொண்டாட்டத்திற்காக கொடிகளை தைத்துக் கொடுத்தவர் மற்றும் அன்றைய தினம் பாக்கு மரக்கன்றுகளை விநியோகித்தவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக அமுதன் மேலும் தெரிவிக்கின்றார்.

"டெயிலர் கடையொன்றில் கொடிகளை கைத்து எடுத்தோம் அவரிடமும் சென்று விசாரணை செய்துள்ளனர். இனி இவ்வாறான வேலைகளை எமக்கு செய்துகொடுக்கக்கூடாது என்ற தொனியில் அவரை பொலிஸார் அச்சுறுத்தியுள்ளனர். உயிரிழந்தவர்களின் நினைவாக பாக்கு கன்றுகளை தந்துதவியவரையும் பொலிஸார் சென்று விசாரித்துள்ளனர்."

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாவீரர் தின நிகழ்வு தொடர்பில் புதிய அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விளக்கிய அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ, பயங்கரவாத மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்பினை கொண்டாடவோ, அவர்களது சின்னங்கள், கொடிகள் அல்லது பதாகைகளை காட்சிப்படுத்தவோ எவ்வித உரிமையும் இல்லையெனக் குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறாயினும், உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூரும் தமிழ் மக்களுக்கான உரிமையை தாம் மதிப்பதாக அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

நவம்பர் 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரையான வாரத்தில் வடக்கு கிழக்கில் 244 இடங்களில் தமிழ் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளதாகவும், இதுத் தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால கடந்த டிசம்பர் மாதம் 4ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். 10 இடங்களில் புலிகளின் சில சின்னங்கள் காட்சிப்படுத்தப்பட்டமை குறித்த சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் புகைப்படத்தை முகநூலில் வெளியிட்டதற்காக கடந்த நவம்பர் 30 ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம், இணுவில் மேற்கு, சுன்னாக்கம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மனோகரன் கயந்தரூபன், நவம்பர் 01 ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவரை டிசம்பர் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அன்றைய தினம் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா மனோகரன் கஜந்தரூபனை இரண்டு இலட்சம் ரூபாய் ரொக்கப் பிணையில் விடுவித்ததுடன் வெளிநாட்டுப் பயணத்திற்கும் தடை விதித்து உத்தரவிட்டார்.

# சீன இராணுவ விஞ்ஞான அக்கடமி ஆய்வாளர்களும் இலங்கை பாத்பைண்டர் பவுன்டேஷன் பிரதிநிதிகளும் கொழும்பில் கலந்துரையாடினர்

**- ந.லோகதயாளன்**

இலங்கைக்கு வருகைதந்திருக்கும் சீன நாட்டின் பெய்ஜிங்கின் இராணுவ விஞ்ஞான அகடமியின் ஆய்வாளர்களுக்கும் பாத்பைண்டர் பவுன்டேஷன் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் பேலியகொடவில் அமைந்திருக்கும் அவ்வமைப்பின் தலைமையகத்தில் நடைபெற்றது.



பாத்பைண்டர் பவுன்டேஷன் அமைப்புடனான தொடர்புகளை வலுப்படுத்துவதுடன், இருதரப்பினருக்கும் நன்மையளிக்கக்கூடிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் இலங்கைக்கு வருகைதந்திருக்கும் பெய்ஜிங் இராணுவ சட்டக்கட்டமைப்பு கற்கைகள் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இயங்கிவரும் இராணுவ விஞ்ஞான அகடமியின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



இலங்கையும் சீனாவும் எதிர் காலத்தில் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு ஏதுவான புதிய வாய்ப்புக்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இவ்விருதரப்பு சந்திப்பின்போது ஒரு மண்டலம், ஒரு பாதை செயற்திட்டத்தின் பின்னணியில் சீன - இலங்கை உறவு, இருநாடுகளினதும் பாதுகாப்புத்துறை ஒழுங்குகள் மற்றும் இராணுவ சட்டக்கட்டமைப்பு தொடர்பான ஒப்பீடு, பாத்பைண்டர் பவுன்டேஷன் போன்ற வெற்றிகரமான இராஜதந்திர கொள்கைசார் அமைப்பை நிறுவுவதற்கான அணுகுமுறைகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னாரில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசின் உதவி பொருட்களை வழங்கிய யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதுவர்

- எஸ்.ஆர்.லெம்பேட் (07-12-2024)

இந்திய அரசாங்கத்தின் ஊடாக இந்திய மக்களின் உதவிப் பொருட்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மன்னார் பகுதி மக்களுக்கு 07-12-2024 அன்றைய தினம் சனிக்கிழமை மதியம் இலங்கைக்கான இந்திய துணைத் தூதரினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் வேண்டுகோளுக்கு அமைவாக இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய மக்களின் உதவி திட்டத்தினூடாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாய் மற்றும் பெட் சீட்.இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டது.





மன்னார் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மன்னார் துள்ளு குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் உள்ள 8 கிராமங்களை சேர்ந்த பாதிக்கப்பட்ட 461 குடும்பங்களுக்கு துள்ளு குடியிருப்பு ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் குறித்த உதவி பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த உதவி பொருட்கள் மன்னார் மாவட்ட பகுதிகளை சேர்ந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் 1655 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட உள்ளது.

துள்ளு குடியிருப்பு ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ் இந்திய துணைத் தூதர் ஸ்ரீ சாய் முரளி உட்பட யாழ் இந்திய துணைத் தூதரக அதிகாரி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ,மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் உட்பட குறித்த பகுதி கிராம அலுவலர். கலந்து கொண்டு உதவி பொருட்களை வழங்கி வைத்தனர்.





# தடைகளை உடைத்து சாதனைபடைத்த வீரமங்கை மன்னார் யதுர்சிகாவினால் வன்னிமண்ணுக்குப் பெருமை – ரவிகரன் எம்.பி வாழ்த்து

- எஸ்.ஆர்.லெம்பேட் (09-12-2024)

மன்னார் - தோட்டவெளி அரசினர் தமிழக்கலவன் பாடசாலை மாணவியான அன்ரன் ஜேசுதாசன் யதுர்சிகா பல தடைகளைக் கடந்து ஈட்டி எறிதலில் தேசியரீதியில் தங்கத்தை சுவீகரித்து ஒட்டுமொத்த வன்னிமண்ணுக்கும் பெருமை சேர்த்திருப்பதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு யதுர்சிகாவின் சாதனைப் பயணமானது தொடர்ந்து ஆசிய மற்றும், சர்வதேச ரீதியிலும் வியாபிக்கவேண்டுமென ரவிகரன் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் மட்ட தேசிய மெய்வல்லுனர் போட்டியில், மகளிருக்கான ஈட்டி எறிதல் போட்டியில் 37.37 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்து மன்னார் தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி அன்ரன் ஜேசுதாசன் யதுர்சிகா தங்கம் வென்று சாதனை படைத்தார்.

இந் நிலையில் சாதனை மங்கை யதுர்சிகாவிற்கான தனது வாழ்த்துச் செய்தியிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது, சாதனைப் பெண் யதுர்சிகாவினால் ஒட்டுமொத்த வன்னிமண்ணும் பெருமையடைகின்றது.

பலத்த தடைகளையும் சோதனைகளையும், வேதனைகளையும் கடந்தே யதுர்சிகா இந்த சாதனையைப் படைத்திருக்கின்றார்.

யதுர்சிகா கல்வி கற்கின்ற தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் விளையாட்டுமைதானம் இல்லை என்று சொல்லப்படுகின்றது.

அதேவேளை பயிற்சியில் ஈடுபட்டிருந்த காலத்தில் விபத்தொன்றில் சிக்கி அவர் பலத்த இன்னல்களுக்கு முகங்கொடுத்திருக்கின்றார்.

இவ்வாறாக பல சோதனைகளையும், வேதனைகளையும், தடைகளையும் கடந்துதான் யதுர்சிகா இந்த சாதனையைப் படைத்திருக்கின்றார்.

அந்தவகையில் யதுர்சிகா சாதிக்கத் துடிக்கின்ற அனைத்து இளையோருக்குமான ஒரு முன்னுதாரணமாக அமைகின்றார்.

அவர் தேசியத்தைத் தொடர்ந்து இனி ஆசிய, சர்வதேசமட்டங்களிலும் சாதனை படைக்கவேண்டும். யதுர்சிகாவின் சாதனைப் பயணம் தொடரட்டும். அவரின் இலட்சியக் கனவுகள் மெய்ப்பட வாழ்த்துகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.



கனடிய செய்திகள் Canadian News

# சென்னையிலிருந்து கனடா நோக்கிப் பயணமாகின்றார் கரு பழனியப்பன் அவர்கள்...







நாளை மறுநாள் சனிக்கிழமை 14ம் திகதி கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ள "உதயன்" பத்திரிகையின் 28வது ஆண்டு விழாவில் சிறப்புரையாற்றவும் தனது ரசிகர்களைச் சந்திக்கவுமாக இந்த பயணம் கனடா உதயன்பத்திரிகை நிறுவனத்தினால் ஒழுங்குபடுத்தப்பெற்றுள்ளது.

இங்கே காணப்படும் படத்தில் கனடா உதயன் சென்னைச் செய்தியாளர் அருண் கதாகரன் அவரை சென்னை விமான நிலையத்தில் வழியனுப்பி வைப்பதைக் காணலாம்.

கனடிய செய்திகள் Canadian News

## Dominion Lending Centres, and The Guardian Home Realty Inc. Jointly Hosted Their Beautiful ''Guardian Gala Night 2024"

## Dominion Lending Centres, and The Guardian Home Realty Inc. இணைந்து நடத்திய வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் விழா





















Dominion Lending Centres, and The Guardian Home Realty Inc. jointly hosted their beautiful 'Guardian Gala Night 2024', on December 7, 2024 at Scarborough Convention Centre in Toronto.

Mr. Sutharsan Nadarajah and Mrs. Gini Annarasa, a wonderful couple, with their team, presented the colorful event.

---

Dominion Lending Centres, and The Guardian Home Realty Inc. இணைந்து நடத்திய வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் விழா கடந்த 7ம் திகதி சனிக்கிழமையன்று Scarborough Convention Centre மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நிறுவனங்களின் உரிமையாளர் சுதர்சன் நடராஜா - கினி அன்னராசா தம்பதி தமது குழுவினருடன் இணைந்து மேற்படி விருதுகள் வழங்கும் விழாவை வெற்றிகரமாகவும் அழகுறவும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

சிறப்பு விருந்தினர்களில் ஒருவராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஸ்காபுறோ வடக்கு பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்களின் நண்பருமான சுவான் சாண் அவர்கள் Dominion Lending Centres, மற்றும் The Guardian Home Realty Inc. நிறுவனங்களின் வெற்றிகரமான வீடு விற்பனைத்துறை வர்த்தகம் மேலும் வெற்றிகரமாக நடைபெற தங்கள வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

தமக்கான விற்பனை விருதுகளைப் பெற்றுக்கொண்ட அனைத்து விற்பனை முகவர்களும் மகிழ்ச்சியுடன் தங்கள் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

இங்கே காணப்படும் படங்கள் விழாவில் எடுக்கப்பெற்றவையாகும்.



## சுயேச்சை நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மீது யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு!

இலங்கை செய்திகள் Sri Lanka News

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு எதிராக இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அனுமதியின்றி பிரவேசித்து, பணிக்கு இடையூறு செய்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மீது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தியை தொடர்புகொண்டு வினவியவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் அனுமதி பெறாமல் வைத்தியசாலைக்குள் நுழைந்து தர்க்கம் செய்ததாகவும், வைத்தியசாலையின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

## வெள்ள உதவிகள் வழங்கினாலும் தமிழ் ஆர்வலர்களுக்கு இலங்கை அரசின் "புலனாய்வுத்துறை அச்சுறுத்தல்"




அண்மையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவிகளை வழங்கும் உள்ளூர் வெகுஜன அமைப்புக்களை அரச புலனாய்வுப் பிரிவினர் அச்சுறுத்துவதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைக் கண்டறியும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தலைவி ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் வடக்கிலும் கிழக்கிலும் பெய்த கடும் மழையினால் பாதிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் பிரதேச மக்களுக்கு உதவிகளை வழங்கும் போது தமிழ்த் தாய்மார்களும் அச்சுறுத்தலுக்கு உள்ளானதை மிக அண்மைய உதாரணமாக, முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி சுட்டிக்காட்டுகின்றார்.

"நான்கு நாட்களுக்கு முன்னர் வெள்ள அழிவில் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு எவ்வித உதவிகளும் கிடைக்காத நிலையில் நாங்கள் சிறு சிறு உதவிகளை வெளிநாட்டவர்களிடம் பெற்று அவர்களுக்கு அந்த பொதிகளை கொடுக்க செல்லும் போது, என்னென பொருட்கள் தந்தார்கள்? யார் இதைத் தந்தது? என புலனாய்வுப் பிரிவினர் கேள்வி எழுப்புகின்றனர். இது கடும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது".

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு உதவிகள் வழங்கப்படுவதை படமெடுக்கும் அரசிடம் நீதியை எதிர்பார்க்க முடியாது என யாழ்ப்பாண ஊடக மையத்தில் அண்மையில் (டிசம்பர் 8) நடைபெற்ற ஊடக சந்திப்பில் மரியசுரேஷ் ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.

"வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் ஆராயுமாறு அந்த அதிகாரிகளுக்கு அரசாங்கம் சொல்லியிருக்கலாம், ஆனால் அதனை செய்யாமல் நாங்கள் அந்த பொருட்களை கொண்டுபோய் கொடுக்கையில் புகைப்படமெடுப்பதால் இந்த அரசாங்கம் எங்களுக்கு எவ்வாறான நீதியை பெற்றுத்தருமென்பதை சிந்தித்து பாருங்கள்".

"அவர் எம்மை அழிக்கப்போவதாக சொல்லாவிட்டாலும் அவருடைய புலனாய்வு பிரிவு மிகவும் அச்சுறுத்தலான முறையில் செயல்படுகிறது. மாவட்ட ரீதியாக தொடர்ச்சியாக கடந்த மூன்று மாதங்களாக அவர்கள் எங்கள் மேல் கை வைக்கும் அளவுக்கு அச்சுறுத்துகின்றார்கள்".


YOU MAY BE SURPRISED TO KNOW

THERE ARE JUST A FEW CONDITIONS THAT ARE COVERED UNDER

CANCER
HEART DISEASE
DIABETES

THANA INSURANCE

ONLINE 24/7

100% TAX FREE MONEY

COVERAGE WILL START WITHIN 48 HOURS

PREMIUM NEVER INCREASE
COVERAGE UNTIL LIFE

NON MEDICAL LIFE INSURANCE

| AGE | 25000 | | 50000 | |
|---|---|---|---|---|
| | M | F | M | F |
| 60 | $79 | $69 | $154 | $132 |
| 65 | $103 | $89 | $202 | $173 |
| 70 | $141 | $116 | $276 | $227 |



Thana Manickavasagar
Insurance Broker

ASK THANA Cell : 416. 728. 5772 | Office: 416.519.3896

Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4

# இந்திய படகுகள் வடக்கு கடல் பரப்பில் மீன்பிடியில் ஈடுபட அனுமதியளிக்கும் எந்த திட்டமும் கடந்த காலங்களில் தம்மிடம் இருந்திருக்கவில்லை – டக்ளஸ் தேவானந்தா!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

இந்திய இழுவைமடி படகுகள் இலங்கையின் வடக்கு கடல் பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுதற்கு அனுமதியளிக்கும் எந்தவகையான திட்டமும் கடந்த காலங்களில் தம்மிடம் இருந்திருக்கவில்லை என்று தெரிவித்துள்ள முன்னாள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போதைய பலவீனங்களை மறைக்கும் வகையில் கடற்றொழிலாளர்களை திசை திருப்ப முயற்சிக்கப்படுகின்றதா என்ற சந்தேகத்தினையும் வெளிப்படுத்தியுள்ளார்.

வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளை அண்மையில் சந்தித்த தற்போதைய கடற்றொழில் அமைச்சர், இந்திய இழுவைப் படகுகளுக்கு அனுமதி வழங்கும் முன்னைய அரசாங்கத்தின் சிந்தனையை தற்போதைய அரசாங்கம் கைவிட்டு விட்டதாக கூறியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எமது வளங்களை அழிக்கின்ற இழுவைமடி தொழில் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்பதே 90 ஆம் ஆண்டுகளில் இருந்து தன்னுடைய உறுதியான நிலைப்பாடாக இருந்து வருவதாகவும், கடற்றொழில் அமைச்சராக தான் செயற்பட்ட காலப்பகுதியில் கடற்றொழில் அமைச்சின் நிலைப்பாடும் அவ்வாறே இருந்தது எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில், உண்மைக்கு புறம்பான கருத்துக்கள் வெளியிடப்படுவதானது, ஆழமான சந்தேகத்தினை ஏற்படுத்துவதாகவும், இதுதொடர்பாக கடற்றொழிலாளர்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று கூறியதுடன், தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்தபோதும், இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பில் தனது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருந்தமையையும் சுட்டிக்காட்டினார்.

# சந்நிதியான் ஆச்சிரமம் முல்லைத்தீவில் வெள்ள நிவாரணம்!



யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்துன் வற்றாப்பளை, முள்ளியவளை, கேப்பாப்பிலவு, ஐயனார் குடியிருப்பு, ரெட்பானா, விஸ்வமடு ஆகிய கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 165 குடும்பங்களுக்கு ரூபா 495,000 பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருட்கள் வற்றாப்பளையில் வைத்து 11ம் திகதி புதன்கிழமை வழங்கிவைக்கப்பட்டது.





இவ் உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

இதேவேளை சந்நிதியான் ஆச்சிரமத்தால் வீடு ஒன்றினை திருத்தம் செய்வதற்காக பெரும்பான்மை இனத்தை சார்ந்த திருகோணமலை 10ம் கட்டை, வேப்பம்குளம் பகுதியை சேர்ந்த, எஸ். லியனகே என்பவரிற்கு ரூபா 100,000 நிதியும் வழங்கப்பட்டது.

# இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்குறித்து இந்திய உயர்ஸ்தானிகரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது என்கிறார் ரவிகரன் எம்.பி



**- நடராசா லோகதயாளன்**

கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் திகதி இந்திய உயர்ஸ்தானிகருக்கும், இலங்கைத் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே இடம்பெற்ற சந்திப்பின்போது இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகள் குறித்து தம்மால், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்திய உயர்ஸ்தானிகர் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்துவதாகத் தெரிவித்ததுடன், ஜனவரியில் முல்லைத்தீவிற்கு விஜயம் மேற்கொள்வதாகத் தெரிவித்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற உலக மீனவதின நிகழ்வில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த நவம்பர்மாதம் 21ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயம்தொடர்பில் பேசப்பட்டது.

அத்தோடு இந்தச் சந்திப்பில் இந்திய இழுவைப்படகுகள் எமது கடல் பகுதிகளுக்குள் அத்துமீறி வருகைதந்து, எமது மீனவ மக்களின் வாழ்வாதாரங்களைச் சூறையாடிச் செல்கின்ற விடயத்தினையும் முன்வைத்திருந்தேன்.

நாம் கரையில் இருந்து பார்க்கும்போது தெரியக்கூடிய அளவில் வெளிச்சமிட்டவாறு இந்திய இழுவைப் படகுகள் செய்கின்ற அட்டகாசமான செயற்பாடுகளைப் பற்றி அவரிடம் மிக அழுத்தமாகச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

அந்தவகையில் இந்திய மீனவர்களால் எமது மீனவர்களுக்கு ஏற்படும் இழப்புக்கள் தொடர்பில் அவரிடம் மிக விரிவாக எடுத்துக்கூறியிருந்தேன்.

இவ்வாறு அவரிடம் இந்த விடயத்தை முன்வைத்து நான் பேசும்போது ஏனைய தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவாகப் பேசியிருந்தனர்.

இதன்போது உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இதற்குப் பதிலளிக்கும்போது, இந்த இழுவைப் படகுகள் அத்துமீறி நுழையும் விடயத்தில் கவனம் செலுத்துவதாகவும், எதிர்வரும் ஜனவரியில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் தாம் வருகைதரவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறாக இந்த விடயங்களில் நாம் தொடர்ந்தும் அவதானம் செலுத்திக்கொண்டேயிருக்கின்றோம்.

இதுமாத்திரமின்றி பாராளுமன்றத்தில் பேசக்கிடைக்கின்ற நேரங்களிலும் இந்த விடயம் தொடர்பில் பேசுவோம்.

இந்திய இழுவைப்படகுகள் எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தினைச் சூறையாடுவதற்கு எதிராக இதற்கு முன்னர் எவ்வாறு குரல்கொடுத்துவந்தோமோ அதேபோல் தொடர்ந்தும் இந்த விடயத்தில் குரல்கொடுப்போம்.

அதேபோல் தென்னிலங்கைமீனவர்களின் தடைசெய்யப்பட்ட கடற்றொழில் செயற்பாடுகளைத் தடுப்பதற்காகவும் தொடர்ந்தும் நாம் குரல்கொடுப்போம்.

இந்த விடயங்கள் தொடர்பில் கடற்றொழில் அமைச்சருடனும் பேசியிருக்கின்றேன்.

குறித்த விடயம் தொடர்பில் கவனம்செலுத்துவதாக கடற்றொழில் அமைச்சரும் உறுதியளித்திருக்கின்றார்.

அதேவேளை இந்த காற்றாலைத் திட்டம் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். கடந்த நாட்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின்போது மன்னாருக்குச் சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராயும்போது, அங்குள்ள மக்கள் கூடுதாலாக இந்த காற்றாலைத் திட்டத்தினால் ஏற்படும் பாதிப்புத் தொடர்பில் தெரிவித்திருந்தனர். அந்தவிடயம் தொடர்பிலும் பேசியுள்ளோம். காற்றாலைத் திட்டத்தால் மன்னாரில் உள்ள பாதிப்பு நிலைமைகள் குறித்தும் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

அத்தோடு யாழ்ப்பாணத்திற்கும் இந்த காற்றாலைத் திட்டத்தைக் கொண்டுவரப்போவதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே யாழ்ப்பாணம் காற்றாலை தொடர்பான விடயங்களையும், மன்னார் காற்றாலை தொடர்பானவிடயங்களையும் உரியவர்கள் விரிவாக எம்மிடம் கையளியுங்கள்.

இதேவேளை மன்னாரில் கனிய மணல் அகழ்வு தொடர்பான பிரச்சினையும் காணப்படுகின்றது. முல்லைத்தீவில் மக்கள் இடப்பெயர்வைச் சந்தித்திருந்த காலத்தில், கொக்கிளாயில் கனியமணல் அகழ்விற்கென மக்களின் காணிகள் சுமார் 44 ஏக்கர் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதன்பிற்பாடு கனியமணல் அகழ்விற்காக அவர்கள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் எமது போராட்டங்களினால் கைவிடப்பட்டிருக்கின்றது.

மேலும் சட்டவிரோத கடற்றொழில்கள் என அரசால் அறிவிக்கப்பட்ட கடற்றொழில் செயற்பாடுகள் அனைத்தையும் முற்றாகத் தடைசெய்து, எமது மீனவர்களின் முறையான கடற்றொழில் செயற்பாடுகளுக்கு உதவவேண்டும். இந்திய இழுவைப்படகுகளால் எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டும். இந்த விடயங்களுக்காக நாம் தொடர்ந்தும் குரல் கொடும்போம் - என்றார்.

## வீணாவின் கவிக்கணை

எண்ணங்கள் யாவும்
வண்ணங்களாய் மாறி,
வண்ணங்கள் எல்லாம்
வசந்தங்காளாய் மாற
அவரது உள்ளங்களும்
அதில் உதிக்கும்
சிந்தனைகளும்
யாரையும் துன்புறுத்தாமலும்
கஷ்டப்படுத்தாமலும்
நல்லதாக இருத்தல் வேண்டும்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற "தமிழ் அறிவு" நூல் வெளியீடு!

காவேரி கலா மன்றம் மற்றும் தாய்நிலம் பதிப்பகம் இணைந்து நடாத்திய, மறைந்த கவிஞர் க.பே.முத்தையா எழுதிய "தமிழ் அறிவு" நூல் வெளியீட்டு நிகழ்வானது 9ம் திகதி திங்கட்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் இடம்பெற்றது.

மறைந்த கவிஞர் க.பே.முத்தையா எழுதிய ஏழாவது படைப்பாக இந்த நூல் அமைந்துள்ளது.







பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நினைவுப் பேருரையை முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும், நூலின் ஆய்வுரையை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலனும் ஆற்றியிருந்ததனர்.

நூலின் முதற் பிரதியை பேராசிரியர் ரட்ணஜீவன் எச்.ஹூல் வழங்கி வைக்க பேராசிரியர் அ.சண்முகதாஸ் அதனை பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் காவேரி கலா மன்றத்தினர், தமிழ் அறிஞர்கள், மாணவர்கள், கல்விமான்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# ஐந்து நாட்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குடும்பப் பெண் பருத்தித்துறையில் உயிரிழப்பு!

ஐந்து நாள் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட இளம் தாய் ஒருவர் 11ம் திகதி புதன்கிழமை உயிரிழந்துள்ளார். பருத்தித்துறையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த சுரேஷ் குமார் ரஞ்சிதா (வயது 33) என்பவரே உயிரிழந்தவராவார். கடந்த மூன்று தினங்களாக இவருக்கு காய்ச்சல் ஏற்பட்டதைத் தொடர்ந்து பனடோல் உட்கொண்டுள்ளார். காய்ச்சல் குணமடையாத நிலையில் திங்கட்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போது அவர் மயங்கியுள்ளார்.

இந்நிலையில் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று செவ்வாய்க் கிழமை முற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# வடக்கு ஆளுநருக்கும் பிரிட்டன் தூதரகத்தின் பிரதிநிதிக்குமிடையே ஆளுநர் செயலகத்தில் சந்திப்பு!



இந்த அரசாங்கத்தின் காலத்தில் தமது பிரச்சினைகள் தீர்க்கப்படும் என மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள், பிரிட்டன் தூதரகத்தின் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகளுக்கான முதனிலைச் செயலர் ஹென்றி டொனைட்டிடம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 10.12.2024 அன்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற சந்திப்பின்போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டமைக்கு முதலில் வாழ்த்துக்களைத் தெரிவித்த முதனிலைச் செயலர், வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் அறிவது தனது பயணத்தின் நோக்கம் எனக் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து இன்னமும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், குறிப்பாக மக்களின் காணிகள் கடந்த காலங்களில் அவர்கள் இடம்பெயர்ந்திருந்த சந்தர்ப்பங்களில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் தமது ஆளுகைக்கு உட்பட்டதாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டமையால் தற்போது சிக்கல் நிலைமைகள் ஏற்பட்டுள்ளது என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

விவசாயிகள் வாழ்வாதாரம் இதனால் கடுமையான பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது என்று குறிப்பிட்ட ஆளுநர், வடக்கு மாகாணத்து மக்களின் முக்கியமான பிரச்சினையாக இது உள்ளது எனவும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட சில வீட்டுத் திட்டங்கள் இடைநடுவில் இருப்பதால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனவும் அவை விரைவில் பூர்த்தியாக்கப்பட வேண்டிய தேவை உள்ளதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

வலி. வடக்கில் பாதுகாப்புத் தரப்பினர் வசம் நீண்ட காலம் இருந்த வீதி மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்டமை சிறந்த நடவடிக்கை எனக் குறிப்பிட்ட ஆளுநர், மக்கள் மேலும் வீதிகளை, காணிகளை விடுவிக்கக் கோருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார். அத்துடன் பாதுகாப்புத் தரப்பினரால் ஏற்படுத்தப்பட்டிருந்த சோதனைச் சாவடிகள் மற்றும் வீதித் தடைகள் என்பன அகற்றப்பட்டுள்ளன என்பதையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளமையால் அதிகளவில் வருகின்றனர் எனக் குறிப்பிட்ட ஆளுநர் அடுத்த ஆண்டு முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த திட்டமிட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையிலும் இளையோருக்கான வேலைவாய்ப்புக்களை வழங்கும் நோக்கிலும் பலாலியிலுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவாக்கப்படவுள்ளதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார். காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், பொதிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் விரைவில் அதற்கும் சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் தமிழகத்தில் அண்ணளவாக ஒரு லட்சம் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக உள்ளனர் எனவும் அவர்கள் நாடு திரும்பினால் அவர்களுக்குரிய வாழ்வாதார, வதிவிட உதவிகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தின் பிரதான வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டபோதும் உள்ளக வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை என்று குறிப்பிட்ட ஆளுநர் அவற்றை எதிர்காலத்தில் விரைந்து அபிவிருத்தி செய்ய எதிர்பார்ப்பதாகவும், தற்போதைய அரசாங்கத்தின் காலத்திலேயே அபிவிருத்திகளைச் செய்து முடிக்கலாம் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை, ஐ.நா. முகவர் அமைப்புக்கள் ஊடாக பிரிட்டன் அரசாங்கம் கடந்த காலங்களில் வடக்கு மக்களுக்கு மேற்கொண்ட உதவிகளுக்கு ஆளுநர் நன்றிகளையும் தெரிவித்தார்.



# Tamil Mothers Accuse State Intelligence of Snooping on them During Flood Relief Work.
## "AKD Government Continues to Intimidate Us" Accuse War-Affected Tamil Mothers.
## Government Spying on Tamils Rather Than Focusing on Flood Relief Operations Say Tamils.

State Intelligence agencies in Sri Lanka are accused of spying and intimidating the public welfare organizations that are at the forefront of assisting the Tamils who were affected by the recent cyclone and floods in the North and East of the country.

A leading member of the Association for the Relatives of the Enforced Disappearances (ARED), a civil society group created to search for the tens of thousands of people who disappeared during Sri Lanka's armed conflict says, even humanitarian operations and help are being threatened by the intelligence agencies, which is hampering the relief operations for the affected.

Despite personal losses and extreme mental agony and trauma faced by the ARED members who are searching for their loved ones who were either handed over or surrendered to the security forces, say even their small efforts of helping the flood-affected are being seen with suspicious eyes and they are subjected to intimidation by the state agencies.

Most part of the North and East were heavily flooded in the recent cyclonic conditions and severe downpours causing floods throwing the life of the war-affected Tamils out of gear and thousands of them are yet to get back to their normal life, even as rains continue.

Such actions are not only intimidating but also humiliating says MariaSuresh Eswary, President of the Mullaitivu District ARED, and says the most recent example of such a threat came when they were helping the Tamils affected by heavy floods in the Oddusuddan area.

"The flood-affected did not get any assistance or relief. So four days ago we organized from relief getting help from the diaspora. We packed those relief material in small packs and were getting ready to distribute them. At that time the intelligence officials intervened asking as to who gave that relief material, and what items were in it. This was hugely intimidating".

She was speaking to media persons at the Jaffna Press Club. She accused the government of filming them while distributing relief materials, instead of analyzing the damage caused by the floods and organizing help and relief to the affected Tamils.

"The government could have instructed the officials to assess the damages of the flood. But, without doing that, they are filming our activities of what we are doing in the relief operations including what we are distributing and to whom. How can such a government render justice to us? You think for yourselves".

Mariasuresh Eswari further stressed that Anura Kumara Dissanayaka was elected president due to the Tamil votes. Even then the activities of intelligence agencies for the past three months have been very intimidating and we are under constant surveillance.

"Even though he has not said he would not finish us off, his intelligence agencies act in a threatening manner. District-wise over the past three months, their intimidation has been continuous and increasing".



# Elderly Tamil Women Question by 'Terror Police' for Protesting Against Medicine Short Supply

**- Siva Parameswaran**

Her only action was seeking to solve the medicine shortage in the country. And the counter action was being questioned by the Counter Terrorism Investigation Department (CTID) dubbed the 'Terror Police'.

Anjalidevi Navaratnarasa is a Human Rights Defender based in the East of the country. She had staged a protest two years ago (2022) when there was acute shortage of medicines in the country. For seeking to sort out the medicines shortage and ensure its uninterrupted supply she was summoned for inquiry twice this year (2024).

Hailing from Narayanapuram in Trincomalee, 60 years old Anjalidevi Navaratnarasa was questioned by the CTID Trincomalee branch was questioned for the second time on the 4th of December from 10 AM to 12.30 PM, local journalists say.

She was summoned by the police without informing any specific reason by the CTID and Intelligence agencies. After questioning her for two and half hours, authorities present there said a statement was recorded from her about the protest she staged what they call 'against the government' citing a shortage of medicines in 2022. They also say she was summoned to record the statement.

Local journalists say a statement was earlier recorded from her on the 7th of February 2024, during the regime of Ranil Wickremesinghe, by the CTID and the intelligence agencies.

When the CTID and Intelligence agencies questioned Anjalidevi Navaratnarasa about why she undersook such protests, she replied back saying her protest for the welfare of the people regarding shortage of medicines was similar to farmers protesting seeking to redress their grievances and other sections of the society taking forward protests. It was basically for people's issues, she said according to local journalists.

Police and intel agencies in Trincomalee also questioned her based on her Passport number and personal details, in particular regarding her trip to Switzerland among her visits abroad.

She was also questioned about the Police Form 256 signed by the OIC on the 2nd of December, shared on social media platforms, through which she was summoned for inquiry by the CTID and intelligence agencies, asking her to report to them on the 4th of December.

Anjalidevi Navaratnarasa told the officers, that she had just shared it with her lawyer seeking advice, and she is not aware of how it was shared over social media platforms.

Officials say she may be summoned again in the next few days for recording further statements as part of the inquiries being taken forward by the CTID and the intelligence agencies.

Local journalists add that Anjalidevi Navaratnarasa was a former activist in an NGO and was at the forefront of women's rights in the region.

# 'Maveerar Day' - Police Question Tamil Man for Using 'Karthikai Poo'.
## Sri Lanka Police Continue to Harass Tamils Who Organized 'Maaveerar Naal'.
## Tamil Man Questioned by Police About Funds and Support for 'Maaveer Day' Event.

Earlier it was the photograph of Prabhakaran, now it is about the 'Karthikai flower'.

Sri Lankan Police are so perturbed about the flower native to the nation's North and East.

Now, a Tamil from the North has been inquired by the police for organizing the 'Hero's Day'.

Police are understood to have questioned him about the distribution of the 'Karthikai Poo'- the designated as the native flower of 'Tamil Eelam' by the now militarily defeated Tamil Tigers (LTTE) and the distribution of Areca nut saplings to those assembled to pay tributes to those who lost their lives in the brutal civil war which raged for over three decades.

Gloriosa Lily also known as Flaming Lily and in Tamil as Karthikai Poo or Senganthal is a native flower to South and South East Asia and parts of Africa. Its rich and vibrant colours of Yellow and Red along with its petals glittering like a flaming torch is very much part of the Tamil culture and literature.

Local journalists say Police questioned Amuthan for close to an hour after summoning him on the 8th of December (Sunday) in connection with the 'Maaveerar Day' observation at the Kokkuvil junction in Jaffna on the 27th of November.

Amuthan says he was questioned about who funded the 'Maaveerar Day' event, and who organized and sponsored it. He was speaking to the local media after visiting the Police Station along with his friend and recording his statement.

"They asked me who did this. How was this organized? who funded it? Further, they questioned me about where I got the pictures of the 'Karthikai Poo'. I told them we took it from the internet. I was further asked who else jointly organized the event, for which I told a friend of mine helped me".

However, the Police did not record any statement from his friend, local media persons add.

Amuthan adds the tailor who stitched flats for the 'Maaveerar Day' event and the person who distributed the Arce nut saplings on that day were also inquired by the Police.

"We stitched the flags at a local tailor shop. He too was questioned. Police threatened him in a strict tone not to repeat any such work for us in the future. The individual who donated Arce nut saplings in memory of those who died was also subject to questioning by the Police.

Although the AKD government said it won't object to people paying tributes to those who lost their lives during the war on the 'Maaveerar Naal' (Nov 27), cabinet spokesperson Dr. Nalinda Jayatissa told a day before no display of any emblems, flags or banners related to what they call terrorists or banned organization could be displayed during the memorial service.

"Commemorating relatives is one thing. Promoting the LTTE or any other terrorist organization is another thing. Therefore, the two should not be confused. We have made it very clear that we respect the right of those people to commemorate their relatives, but we will not allow anything illegal or prohibited by the government."


Minister for Public Safety and Parliamentary Affairs Ananda Wijepala told the Parliament on the 4th of December that starting 21st November to the 27th –the 'Maaveerar Week', 244 Tamil 'Maaveerar Day' memorial events were held in the North and East and legal action has been initiated regarding them. He told the house legal action had been initiated regarding exhibiting some signs and symbols of the LTTE in 10 places.

Earlier a Tamil man, Manoharan Kajendraroopan, from the village of Inuvil West in Chunnakam was arrested by the police on the 29th of November this year, for what they allege of posting a video of slain LTTE leader Velupillai Prabhakaran on his social media Facebook wall.

Father of two, Manoharan Kajendraroopn was initially remanded to judicial custody till December 4th. Subsequently, he was released on bail of LKR 200,000 when produced in court that day by Jaffna Magistrate A A Anadharajah. He was also banned from traveling abroad.

# வலிகளும் வரிகளும் வரலாறான முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நூல் அவுஸ்த்திரேலியாவின் சிட்னி நகரில் வெளியிடப்பட்டது

**- நவீனன்**






**த**மிழினப் படுகொலையின் சாட்சியும், 2009 வன்னி போர்க்களத்தில் இறுதிவரை பணியாற்றிய மருத்துவர்களில் ஒருவருமான மருத்துவர் வரதராஜா அவர்களின் “Untold Truth Of Tamil Genocide" பெருந்திரளான மக்களின் முன்னிலையில் சிட்னியில் வெளியிடப்பட்டது.

“தமிழினப் படுகொலையின் சொல்லப்படாத உண்மைகள்” எனும் வைத்தியர் துரைராஜா வரதராஜாவின் வாழ்க்கை வரலாறு நூல் அவுஸ்திரேலியாவில் அடிலெய்ட், மெல்பேர்ண் நகர்களில் ஏற்கனவே வெளியாகியது. சிட்னியில் 8-12-24 ஞாயிற்றுக்கிழமை நூல் வெளியீடு சிறப்புற நடைபெற்றது.

இறுதிப் போரில் தாயக மக்களுக்கு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை பேரவலத்தின் போது மகத்தான சேவையாற்றிய மருத்துவரை மதிப்பளிக்கும் வண்ணம் சிட்னியில் புத்தக வெளியீடும் நேரடி சந்திப்பு கலந்துரையாடலும் நடைபெற்றது.

இந்நூல் வெளியீடு 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை பிளாக் டவுண் நகர நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

சர்வதேசம் எங்கும் ஈழத்தமிழர்களின் பலத்த ஆதரவுடன் வெளியிடப்பட்ட வைத்தியர் துரைராஜா வரதராஜாவின் வாழ்க்கை வரலாறு நூல் ஆங்கில மொழியில் ரஜீ பட்டீசன் எழுதிய “தமிழினப் படுகொலையின் சொல்லப்படாத உண்மைகள்” என்பது ஈழத் தமிழர்களின் துயரமான வரலாற்றையும், அவர்களுக்கு நிகழ்ந்த கொடூரங்களையும் ஆவணமாக்கும் ஒரு முக்கியமான நூலாகும்.

பேரவலம் நிகழ்ந்த முள்ளிவாய்க்காலின் இறுதி நாட்களில் நடந்த இன அழிப்பு நிகழ்வுகளையும், அதன் மையத்தில் நின்று ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களை காப்பாற்ற முயன்ற வைத்தியர் துரைராஜா வரதராஜாவின் தியாகத்தையும், இந்த நூல் ஈழத் தமிழர்களின் தனித்துவமான கலாசாரத்தையும், அவர்களின் அடையாளங்களையும் அழிக்க நடத்தப்பட்ட சதியை முழுமையாக வெளிக்கொண்டு வருகிறது.

ஏராளமான பல்லின அரசியல் சூழ்நிலைகளின் விளைவாக ஈழத் தமிழர்கள் தங்கள் உரிமைகள், பங்காளித்துவம், மற்றும் சுயாட்சி ஆகியவற்றுக்காக எப்படி போராடினார்கள் என்பதையும் இந்நூல் எடுத்துக்கூறுகிறது.

இதுவரை மறைக்கப்பட்ட வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு சொல்லித் தரும் முயற்சியாக இந்நூல் திகழ்கிறது. இது வரலாற்றை மறக்காமல் அதன் பாடங்களை ஆழமாகப் புரிந்து கொள்ளுமாறு இளைய தலைமுறையினருக்கு புகட்டும் ஒரு படைப்பாக இது விளங்குகிறது. ஈழத் தமிழர்களின் துயர அனுபவங்கள், அவர்களது எதிர்கால சுதந்திரத்திற்கான போராட்டத்திற்கு அடித்தளமாக அமைந்தன என்பதையும், எந்த சூழலிலும் மனிதநேயத்தை உயர்த்தி நிறுத்தும் பொறுப்பை உணர்த்துகிறது.

வைத்தியர் துரைராஜா வரதராஜா ஈழத் தமிழர்களின் உண்மையான மனிதநேய வைத்தியராக திகழ்கிறார். அவர் காட்டிய தியாகம், உலகமெங்கும் தமிழ் இனத்தின் எதிர்கால காலப்பகுதிகளுக்கு நம்பிக்கை மற்றும் நீதி தேடும் சான்றாக உள்ளது. ஆங்கில பதிப்பு மூலம் இந்த நூல், ஈழத் தமிழர்களின் துயர வரலாற்றை உலகளாவிய அரங்கில் கொண்டு சேர்க்கும் ஓர் அரிய முயற்சியாக திகழ்கிறது.







தாயக மக்களுக்கு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை பேரவலத்தின் போது மகத்தான சேவையாற்றிய மருத்துவ பெருமகனை மதிப்பளிக்க இந்நிகழ்வினை அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் ஒழுங்கமைத்தது.


NISSAN | VILLAGE NISSAN

தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்







Sajanthan Vijayakumar
SALES CONSULTANT

905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN

25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com



# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 02— 05— 1950

உதிர்வு: 11— 15— 2024

அன்பின் திருவுருவமாக, பாசத்தின் உறைவிடமாக எங்கள் குடும்பத்தின் தீபமாக விளங்கி எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத் துயரில் விட்டுச் சென்ற எங்கள் அன்புத் தெய்வமாகிய **அமரர் முருகேசு சிவசுப்பிரமணியம்** அவர்கள் இறைவன் திருவடி எய்திய சோகமான செய்தியைக் கேள்வியுற்று, எங்கள் இல்லம் தேடி வந்து. நேரில் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய நல்லுள்ளங்களுக்கும், மற்றும் உணவு, ஆகாரங்கள், தேநீர் போன்றவற்றை இல்லத்திற்கு கொண்டு வந்து தந்த அன்புள்ளங்களுக்கும், மலர் வளையங்கள் அனுப்பியவர்களுக்கும், மலர் வளையங்களை வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அஞ்சலி உரையாற்றியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், திருமுறை மற்றும் தேவாரங்களை ஓதியவர்களுக்கும், அனைத்துக் கிரியைகளையும் நடத்திய அந்தணப் பெரியோர்களுக்கும், எங்கள் உளமார்ந்த நன்றி!

அமரர் உயர்திரு முருகேசு சிவசுப்பிரமணியம் அவர்களின் ஞாபகார்த்த கிரியைகள் மற்றும் பூசைகள் 15-12-2024 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் மதியம் 12:00 மணியளவில் Pickering Event Centre (1755 Pickering Pkwy Unit C4, Pickering, ON L1V 6K5) மண்டபத்தில் பிரார்த்தனைகள் மற்றும் மதியபோசனமும் நடைபெறும். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம், மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்



**திரு.முருகேசு சிவசுப்பிரமணியம் (ராசன்)**

**(மாதனை, பருத்தித்துறை)**


Carefirst Family Health Team

**Carefirst Family Health Team**

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள்**
**ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.

அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**



Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**




11/24



**அனைவருக்கும் எமது**
**நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்!**






**MP Salma Zahid, Scarborough Centre**

5-2155 Lawrence Ave. East
Scarborough, ON M1R-5G9
(416) 752-2358
Salma.Zahid@parl.gc.ca
/SalmaZahid15
/SalmaZahid15
SalmaZahidMP



திரைப்பட இயக்குனர் **கரு பழனியப்பன்**

சிறப்புப் பேச்சாளராக பங்கேற்கும்

# கனடா உதயன் பத்திரிகையின்

www.uthayannews.ca

28 ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும்

# உதயன் கலை விழா – 2024

## வெற்றிபெற மனதார

# வாழ்த்துகிறோம்!

யுகம் வானொலி அறிவிப்பாளர்கள்,

கலைஞர்கள் மற்றும் உரிமையாளர்களான

**கணபதி ரவீந்திரன், ரூபி யோகதாசன்**

yugam radio

www.yugamradio.ca

HOTLINE : **416 455 4343 / 647 745 4343**

# மரண அறிவித்தல்

மலர்வு:
14 – 12 – 1934



உதிர்வு:
12 – 12 – 2024

## திருமதி. சத்தியபாலதேவி சிற்றம்பலம்
## (யாழ்ப்பாணம், கொட்டடி)

யாழ்ப்பாணம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், கொட்டடி யாழ்ப்பாணம், கனடா ஸ்காபரோ ஆகிய இடங்களில் வசித்து வந்தவருமான திருமதி. சத்தியபாலதேவி அவர்கள் 12-12-2024 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வைத்திலிங்கம்-இராசம்மா தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு- பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிற்றம்பலம் கதிரவேலு (விசக்கடி வைத்தியர் மற்றும் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும்,
ஜெகதீஸ்வரன், சிறீமதி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்.
சிவசக்தி, சிவகுமார் (கனடா), கதிரவேலு (இலண்டன்), சிவானி (இலண்டன்), சிவநாதன் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலகிருஷ்ணன், கருணா, தட்சாயினி, சக்திவேல், தயாழினி ஆகியோரின் அன்பு மாமியாரும்
தமிழினி, ஜோதினி, கார்த்திகாயினி, சாயீசன், அனுசன் (The Draft Room), அபிநயா, ஜேம்ஸ், அபிராமி, தீபோ, சயந்தன், கரிசா ஆகியோரின் பாசமிகு பேத்தியும், பிரணவன், மகேஸ், கிருத்திகா, யனுஸ், கனிஸ், அலிசா, ஆரியன், அர்ச்சுன், விஷ்ணு ஆகியோரின் ஆசைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 8911 Woodbine Ave Markham Ont L3R 5G1 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள Chapel Ride Funeral Home இல் 15-12-2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:00 மணிமுதல் 10:00 மணி வரையும், மறுநாள் 16-12-2024 திங்கட்கிழமை பகல் 12:30 தொடக்கம் 1:30 வரை பார்வைக்காக வைக்கப்பட்டு அதேநாள் பிற்பகல் 1:30 தொடக்கம் 3:30 வரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று Chapel Ride Funeral Home & Cremation (2 Stalwart Industrial Dr, Gormley, ON L0H 1G0) ல் தகனம் செய்யப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு
சிவகுமார் (மகன்) 416-889-3191 சிவநாதன் (மகன்) 44-7956-855982
கதிரவேலு (மகன்) 44-7960-352784 பாலா (மருமகன்) 416-727-6934

# "Shut OMP, Need Justice Not Reparation," Says Protesting Tamil Mothers

**- Siva Parameswaran**




War-affected Tamil mothers, wives, sisters, and the other family members of the enforced disappeared persons have demanded the dissolution of the Office for the Missing Persons (OMP) in Sri Lanka.

The Association for the Relatives of Enforced Disappearances (AERD) who are spearheading a peaceful protest for over 8 years now, has now questioned the relevance of the OMP-established by an Act of the Parliament-if they could not find out even one single individual who disappeared.

The demand comes at a time when the OMP established in 2016 has called for applications to fill up certain member posts in their office. The advertisement for filling up those posts has been published based on the Act, in particular regarding the establishment of the office, administering, and managing day-to-day activities. The Department of Parliamentary Affairs announced recently that people who fulfill the required qualifications have been asked to apply.

"Applications should be submitted in the format given on the Parliament website (www.parliament.lk) under the link appointing members of the OMP," the advertisement calling for members said.

The OMP boasts that its establishment marks a significant milestone in the efforts of the Government of Sri Lanka to address the issues of the missing and the disappeared.

Members of the ARED have now reiterated if the government wishes to solve the issue of the disappeared persons, the OMP has to be dissolved. "That is our stand on the government initiative to fill up vacancies," a statement from the ARED says.

The ARED-Association for the Relatives of the Enforced Disappearances in the North and East Provinces, a civil society group created to search for the tens of thousands of people who disappeared during Sri Lanka's armed conflict- has issued a statement titled "Stand of the ARED with regard to calling of new appointments in the OMP.

"In reality, if they desire to find a solution to the enforced disappearances, they have to immediately dissolve the inefficient OMP. Also, inquiries have to be conducted against the four important persons who were in charge of the posts where our relatives either surrendered, handed over, or arrested and the truth to be brought out. The military officers who were responsible for our relatives going missing are still alive and in positions. By immediately investigating them the truth should be found out. Only that would send a positive signal to us as we have been cheated continuously for years. Without doing that calling for applications to fill up vacant posts in the OMP makes us feel everyone is acting in tandem to deceive us".

The statement signed by Yogarasa Kanakaranjani and Leeladevi Anandanadarajah two office bearers Association for the Relatives of Enforced Disappearances in the North and East has accused the new government of adopting the same strategy as the previous governments and they are unable to see any changes in their way of looking their problems.

"The new government which came to power with the slogan of 'change' is approaching enforced disappearances, an important issue of the Tamils in the same way as the previous Sinhala governments".

The Office on Missing Persons was established in 2017 with the aim of uncovering the truth about missing persons by the then government, which had ratified Resolution 30/1 on Sri Lanka adopted by the United Nations Human Rights Council.

Protesting mothers of the ARED say since the day the OMP Act was drawn and till today all actions of that office have been dictatorial without consulting or listening to those affected. Adding further they say the truth-finding mechanism should be taken forward with the participation of those affected. However, it is being taken forward without openness and in an authoritative and arbitrary manner they allege.

In 2015 resolution number 30/1 was passed in the UNHRC to promote reconciliation, accountability, and improving Human Rights in Sri Lanka. The war-affected Tamil mothers while pointing out the importance of the four pillars of that resolution, Truth, Justice, Reparation, and ensuring non-recurrence, say after finding out the truth it should be subjected to judicial process. However, even after seven years of the OMP being in existence, the truth has not been found in a single case of enforced disappearance, they said in their statement.

The Office for the Missing Persons (OMP) functioning for the past seven years, has recently found out that 14 people are alive after screening through thousands of complaints.

A member of the OMP, Thambiah Yogaraja, in a media briefing in November 2024 has said, details about them cannot be disclosed now.

"Our office has confirmed the fate of 17 persons. Among them, 3 have died. We have collected the information regarding the balance 14. We have found out those 14 are alive. However, we are not in a position to reveal details about it now. After obtaining the approval of the concerned, action will be taken to reveal the respective details".

Speaking in Killinochi, the OMP member Thambiah Yogaraja added that the complaints received by their office have exceeded 20,000.

"Our OMP has received more than 21,630 complaints. Among them, there are duplicate entries and complaints received from the tri-service forces. After deducting those applications, 14,988 files with details were handed over to us for investigation, out of which initial investigation into 6, 788 cases have been completed. Amongst them, interim relief has been granted to 3,800. As such an amount of 200,000LKR has been awarded to each of the complainants".

Reacting sharply to his comments, the Tamil mothers protesting continuously seeking justice question the very purpose of the formation of the OMP. They say the basic reason for establishing such an office was to render justice and not compensation.

"What is the reason for neglecting the rendering of justice and opening an office for reparations? Is it their intention to shut up the poor people by paying compensation without finding the truth, thereby trying to show the number of disappeared less?" ARED questions.

The protesting mothers also raised the inefficiency of the OMP with what they call solid proofs.

"On the 7th of July 2019, we submitted details of five persons who were victims of enforced disappearances. Without taking action on it they now ask for those details again after losing them. This is a classic example of how this office functions. In such a case what is the point of this office continuing in operation?" the Association for the Relatives of Enforced Disappearances in the North and East question in their statement.

The affected families and relatives of the enforced disappeared persons have repeatedly pointed out that the said OMP, which they have already dismissed as a sham, has not even found a single individual who had disappeared.

Tamils have dismissed the OMP as unacceptable to them and continue to stress an international accountability mechanism to find the truth and render justice to those affected and punish the perpetrators of alleged war crimes and crimes against humanity.

The OMP has come under severe criticism that it is not even able to solve one case concerning missing tri-service personnel. If such is the case, how will they solve cases of missing Tamils which are over five times the number? question the elderly mothers.

Elderly mothers who brave the sun and rain in continuing their peaceful protest, demanding an answer about their kith and kin, have also come under intimidation from the State agencies, a detailed statement from the AERD in 2023 said.

"Under the successive Sinhala majoritarian Governments, the mental torture and intimidation of mothers and female activists have intensified. The military came to our house and severely warned us not to participate in the protests. This is a critical dilemma for many mothers: whether to continue searching for the missing son/daughter or ensure the safety of the remaining children by not pushing them into danger, or to totally keep away from all activities. We undergo an enormous amount of racial discrimination at the hands of Sri Lankan officials. As they know that we participate in the protests, we are unable to get any benefit of Government schemes and loans from banks."





# அர்ஜுனா தன்னைத் தெரிந்தெடுத்த மக்களுக்கு எதைப் பெற்றுக்கொடுப்பார்?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

மருத்துவர் அர்ஜுனா தமிழரசியலின் சீரழிவைக் காட்டும் ஒரு கார்ட்டூன் போல ஆகிவிட்டார். கடந்த திங்கட்கிழமை அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் புகுந்து வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தியோடு வாக்குவாதப்பட்டிருக்கிறார்.

சத்தியமூர்த்திக்கு எதிராகவும் ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கு எதிராகவும் அவர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளைத் தனியாக ஆராய வேண்டும். குற்றச்சாட்டுகளில் உண்மை இருந்தால் அதை முறைப்படி அணுக வேண்டும். ஆனால் அவ்வாறு குற்றச்சாட்டுக்கள் இருந்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அரச நிர்வாகத்தில் ஒர் ஒழுங்கு முறை உண்டு. மருத்துவ நிர்வாகத்துறை தொடர்பில் முறைப்பாடுகள் இருந்தால் அதனை மாகாண நிர்வாகத்திற்கு அறிவிக்க வேண்டும். அல்லது ஆளுநருக்கு அறிவிக்கலாம். அல்லது சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சருக்குத் தெரிவிக்கலாம். அந்த மேலிடத்துக்கூடாகத்தான் ஆஸ்பத்திரி மீது நடவடிக்கை எடுக்கலாம்.

அதை விட்டுவிட்டு ஆஸ்பத்திரிக்குள் நேரடியாக இறங்கி தமிழ்த் திரைப்படங்களில் வரும் கதாநாயகர்கள் போல செயல்படுவது ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு அழகல்ல. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இது போன்ற விடயங்களில் நேரடியாக சம்பந்தப்படத் தேவையில்லை. மருத்துவ நிர்வாகத் துறையில் வேலை செய்த அர்ச்சுனாவுக்கு இது தெரியாமலிருக்க நியாயமில்லை. எனினும், தெரிந்து கொண்டும் அவர் ஏன் அந்தத் தவறைச் செய்தார்?

இதற்கு இரண்டு காரணங்களைத்தான் கூறலாம். முதலாவது காரணம், அவர் வழமையாக அப்படித்தான் எதையும் அதற்குரிய முறைக்கூடாக அணுக மாட்டார். ஏடாகூடமாகத்தான் அணுகுவார். தானே எல்லாவற்றுக்குள்ளும் தலையை ஒட்டி, தன்னை முதன்மைப்படுத்தி, அதை நேரலையில் ஓடவிட்டு, அதன்மூலம் தன்னை பிரபல்யப்படுத்துவது. தன்னை எப்பொழுதும் சர்ச்சைகளின் மையத்தில் வைத்திருப்பது.

இப்படிப்பட்ட ஒரு நடைமுறைக்கூடாகத்தான் அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வர முடிந்தது. இதற்கு முன்னரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரி சம்பந்தப்பட்ட விடயங்களிலும் அவர் அவ்வாறுதான் தன்னை முதன்மைப்படுத்தி, நேரலையில் தோன்றி, தன்னை ஒரு கலகக்காரனாக மேலுயர்த்தினார். அப்படித்தான் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலும் அவர் நிர்வாகத்துக்குள் தலையை ஒட்டி தன்னை ஒரு கலகக்காரனாகக் காட்டப் பார்க்கின்றார்.

இரண்டாவது காரணம், அவர் சத்தியமூர்த்தி மீது கோபமாக இருக்கிறார். அவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் தனது கலகத்தைத் தொடங்கியதிலிருந்து மருத்துவர் சத்தியமூர்த்திக்கு எதிரானவராகத்தான் காணப்படுகிறார். கருத்துத் தெரிவித்து வருகிறார். அவர் தேர்தலில் நின்ற பொழுது ஒரு சம்பவம் நடந்தது. தேர்தல் தினத்தன்று சத்தியமூர்த்தி வாக்களித்து விட்டு அதைத் தனது முகநூலில் பதிவிட்டார். அந்தப் பதிவின் கீழ் குறிப்பு எழுதிய ஒருவர் "அர்ஜுனாவுக்குதானே போட்டனீங்கள்?" என்று பகிடியாகக் கேட்டிருந்தார். அதற்கு சத்தியமூர்த்தி "எங்களை பார்த்தல் சீத்த சுவாதீனம் இல்லாதவர்கள் போன்று தோன்றுகின்றதா" என்று பதில் போட்டிருந்தார். சத்தியமூர்த்தி அப்படிப்பட்ட ஒரு குறிப்பைப் போடாமல் விட்டிருக்கலாம். அர்ஜுனா சத்தியமூர்த்தியைப் பழிவாங்க முயற்சிக்கிறார் என்றும் எடுத்துக் கொள்ளலாம். ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகத் தனக்கு இருக்கும் சிறப்புரிமைகளின் அடிப்படையில் தான் அவ்வாறு நடந்து கொள்ளலாம் என்று அவர் நம்புகிறாரோ தெரியவில்லை.

அந்தச் சம்பவத்தில் அவருக்கும் சத்தியமூர்த்திக்கும் இடையில் நடந்த உரையாடலில் அவர் சத்தியமூர்த்தியைப் பார்த்து அவர் தன்னை "சேர்" என்று அழைக்க வேண்டிய ஒரு நிலைக்குத் தான் உயர்ந்திருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார். ஆனால் சத்தியமூர்த்தி அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இங்கேயும் ஒரு பழி வாங்கும் படலம் உண்டு. சாதகச்சேரி மருத்துவமனை அத்தியச்சகராக இருந்த போது, அர்ஜுனா மருத்துவ நிர்வாகத்துக்கு எதிராக நேரலையில் தோன்றி கருத்துகளை தெரிவித்துக் கொண்டிருந்த வேளையில், அவருக்கும் யாழ் போதனா வைத்தியசாலையின் சட்ட மருத்துவ அதிகாரிக்கும் இடையே ஒரு தொலைபேசி முரண்பாடு வந்தது. அதில் சட்ட மருத்துவர் அதிகாரி தனக்கு ஜூனியரான அர்ஜுனா தன்னை சேர் என்று அழைக்க வேண்டும் என்று கேட்கிறார். அதைத் தன்னுடைய சமூக வலைத்தளங்களில் பகிரங்கப்படுத்திய அர்ஜுனா, அதன்மூலம் அதிகம் அனுதாபத்தைத் தேடிக் கொண்டார். அதில் சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரி அதிகம் நிந்திக்கப்பட்டார்.

இப்பொழுது அச்சுனா அதற்கும் பழி வாங்குகிறார். தன்னை சேர் என்று அழைக்குமாறு கேட்ட ஒரு மருத்துவ நிர்வாக கட்டமைப்பை நோக்கி தன்னை அவ்வாறு சேர் என்று அழைக்க வேண்டிய ஒரு வளர்ச்சிக்குத் தான் உயர்ந்துவிட்டதை உணர்த்த முற்படுகின்றார். ஒவ்வொருவரும் தாங்கள் உயரத்தில் இருப்பதாகக் கருதும்போது தமக்குக் கீழிருப்பவர்கள் தங்களை மதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகளை அவர்களுடைய கட்சித் தொண்டர்களில் ஒருபகுதியினர் அவ்வாறுதான் அழைக்கிறார்கள். சுமந்திரனுடைய விசுவாசிகளை விமர்சிப்பவர்கள் அதைச் சுட்டிக் காட்டுவதுண்டு. ஒரு மூத்த சட்டவாளர் என்ற அடிப்படையில் சுமந்திரனுடைய ஜூனியரான சட்டவாளர்கள் அவரை சேர் என்று அழைப்பார்கள். சீனியரை ஒரு ஜூனியர் சேர் என்று அழைப்பது நாட்டில் பல துறைகளில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஏன் அதிகம் போவான்? பல்கலைக் கழகங்களை புகுமுகமானவர்களை சீனியர்கள் எவ்வாறு கையாளுகிறார்கள்? ஒரு சீனியரான மாணவர் ஜூனியரிடம் எதை எதிர்பார்க்கிறார்? இன அழிப்புக்கு உள்ளான தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பல்கலைக்கழகங்களில் இந்த நிலை மாறியுள்ளதா? இல்லையே? அது காலனித்துவ காலத்தின் எச்சம்.

வெள்ளைக்காரர்களுக்குக் கீழ் கூனிக் குறுகி வேலை செய்து பழக்கப்பட்ட "கறுப்பு வெள்ளைக்காரர்கள்" தங்களுக்கு கீழ் வேலை செய்பவர்கள் தங்களை அவ்வாறு மதிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். அந்த மனோநிலையைத்தான் நாடாளுமன்ற உறுப்பினர் சிலரும் பிரதிபலிக்கின்றார்கள். காலனித்துவ ஆதிக்கத்திலிருந்து மனதால் விடுதலை பெறாத பலர் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு. அவர்கள் எல்லாரும் தங்களிடம் சேவை பெற வருகிறவர்களும் தங்களுடைய ஜூனியர்களும் தங்களுக்கு கீழ் வேலை செய்பவர்களும் தங்களை "சேர்" என்று அழைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள்.

அவ்வாறு தன்னை அழைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் பல மூத்த அதிகாரிகள் தங்களுக்கு மேலே இருக்கும்,தங்களுக்கு உத்தரவிடும் அமைச்சர்களுக்கு முன் கூனிக்குறுகி நிற்பார்கள். அமைச்சரை "சேர்" என்று அடிக்கடி விழிப்பார்கள். இத்தனைக்கும் அமைச்சர் அதிகம் படித்தவராக இருக்க மாட்டார். இந்த அதிகாரியின் அறிவுக்கும் கல்வித் தகைமைக்கும் மூப்புக்கும் கிட்டவர முடியாதவராகவும் இருப்பார். ஆனால் இலங்கைத் திருநாட்டில் அதுதான் வழமை. அறிவில்லாத, படியாத, கண்ணியமில்லாத, தமது சொந்த மக்களை ஏமாற்றுகின்ற, அரசியல்வாதிக்கு முன் படித்த நிர்வாக அதிகாரிகள் கூனிக்குறுகி நின்று சேர் என்று விழிப்பது. அதைத்தான் அர்ஜுனா சத்தியமூர்த்தியிடம் எதிர்பார்க்கிறாரா? அவர் அதனை ஒரு பழி வாங்கலாகச் செய்தாரா?.

ஆனால் நாட்டின் ஜனாதிபதியை அவருடைய கட்சிக்காரர்களில் ஒரு பகுதியினர் "தோழர்" என்றுதான் விழிக்கிறார்கள். அவரை சேர் என்றோ அதிமேதகு என்றோ மேன்மைமிகு என்றோ அழைப்பதில்லை. அனுரவும் அவ்வாறு எதிர்பார்ப்பவராகத் தெரியவில்லை. இனப்பிரச்சினை தொடர்பான என்பிபி அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை இக்கட்டுரை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் சிங்கள அரசியலில் மேட்டுக்குடி அரசியல் பாரம்பரியத்தில் இருந்து ஒரு புதிய பாரம்பரியத்தை என்பிபி அரசாங்கம் அறிமுகப்படுத்துமாக இருந்தால் அதை தமிழ்த் தரப்பு மனம் திறந்து பாராட்டலாம்.

அவ்வாறு சிங்கள அரசியலில் மேட்டுக்குடி பாரம்பரியத்தில் இருந்து சில பெயர்வுகள் இடம்பெறத் தொடங்கியிருக்கும் ஒரு காலகட்டத்தில், தமிழ் அரசியலில் ஒரு இளம் நாடாளுமன்ற உறுப்பினர், தான் ஏற்கனவே வேலை பார்த்த மருத்துவ நிர்வாகக் கட்டமைப்பைப் பழிவாங்கும் மனோநிலையோடு அணுக முற்படுகிறாரா? கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மறக்க முடியாத ஒரு தண்டனையை வழங்கினார்கள். அதேசமயம் அர்ச்சுனாவைத் தெரிந்தெடுத்ததன்மூலம் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே தண்டித்துள்ளார்கள் என்று அர்ச்சுனா நிரூபிக்கப் போகிறாரா?

---

# வனப்புறு கனடா (இன்னிசை வெண்பா)

கனடா எனுமோர் கனிவுறு தேசம்
இனவெறி இல்லா இனிப்புறு நேசம்
வனவளம் எங்கும் வளர்ந்து இருந்து
கனமாய் வருமதி காண்.

பல்லின மக்கள் பரந்து வசிக்கிற
தொல்லை அகன்ற சுதந்திர பூமியே!
அல்லும் பகலுமே ஆலைகள் ஓடிட
செல்வம் கொழிக்கும் சிறப்பு.

வந்தோரை ஆதரிக்கும் வண்ணத் தலமது
நொந்தோர் பிணிகளை நீக்கிடும் தேசமாம்
சொந்தம் அறுந்தோர் சுகம்பெறு நாடிது
சந்தம் வருமெனச் சாற்று.

கல்வி வசதியும் காணி உரிமையும்
பல்வகை மக்களின் பண்புகள் காத்திடும்
பல்லோரும் போற்றும் பரப்பு நிலமதை
எல்லோரும் கூடியே ஏற்று.

அகதியாய் வந்த அனைத்து மனிதர்
சுகமாய் இருக்கச் சமத்துவம் ஈந்தே
தனத்துடன் வாழ்விடம் தந்திடும் நாட்டை
வனப்புடன் வாழவே வாழ்த்து.

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# "பழைய அரசாங்கங்களின் கொள்கையை பின்பற்றும் அனுர அரசு" – தமிழ் தாய்மார்கள் குற்றச்சாட்டு

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களால் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்ட காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை **(OMP)** புதுப்பிப்பதன் மூலம் தமது வாக்காளர்களை திருப்திபடுத்தும் பழைய கொள்கையையே புதிய ஜனாதிபதியின் அரசாங்கமும் கடைப்பிடிப்பதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை கண்டறியும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் தாய்மார்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கத்தின் கீழ் முதலாவது சர்வதேச மனித உரிமைகள் தினத்தை கறுப்பு நாளாக பிரகடனப்படுத்தி டிசம்பர் 10ஆம் திகதி வடக்கு, கிழக்கு மாகாணங்களின் 8 மாவட்டங்களிலும் போராட்டங்களை முன்னெடுத்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அவர்களின் அன்புக்குரியவர்களுக்கு சர்வதேச நீதிக்கான கோரிக்கையை மீண்டும் முன்வைத்தனர்.

76ஆவது சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் **(ARED)** செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா தலைமையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகில் பேரணியை ஆரம்பித்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் தாய்மார்கள் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்திற்கு முன்பாக அதனை நிறைவு செய்து, கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் நெருங்கிய ஒரு உறவினரைக் கூட கண்டுபிடிக்க முடியாது ஏழு வருடங்களுக்கும் மேலாக இயங்கி வரும் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு மேலும் புதிய உறுப்பினர்களை இணைத்து மீண்டும் அதனை உயிர்ப்பிக்கும் முயற்சி தமிழ் தாய்மார்களுக்கு வேதனையளிப்பதாக, லீலாதேவி ஆனந்தநடதராஜா ஊடகவியலாளர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

"மாற்றம் என்ற பேருடன் வந்துள்ள புதிய அரசாங்கம் நாங்கள் புறக்கணித்த ஓஎம்பியை புதுப்பிக்க வேண்டுமென்ற உத்வேகத்துடன் செயற்படுவது எங்களுக்கு மன வேதனையை தருகிறது. ஓஎம்பிக்கு ஆட்சிசேர்ப்பு செய்வதால் எங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்த அரசாங்கமும் பழைய அரசாங்கங்கள் போல் தமது வாக்காளர்களை திருப்திபடுத்துவதிலேயே குறியாக இருக்கப்போகின்றார்கள் என்பது தெளிவாகிறது."

2016ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை நிறுவுதல், நிர்வகித்தல் மற்றும் செயற்படுத்தல் ஆகிய விதிகளுக்கு அமைவாக, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் அண்மையில் அறிவித்திருந்தது.

வவுனியா கந்தசாமி கோவிலுக்கு முன்பாக ஆரம்பித்து, வவுனியா பேருந்து நிலையம் வரை தீச்சட்டியை தலையில் சுமந்துகொண்டு பேரணியாகச் சென்ற தமிழ்த் தாய்மார்களுக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவி சிவானந்தன் ஜெனிட்டா தலைமைத்தாங்கினார்.

தமது உயிரை விடுவதற்கு முன், தமது அன்புக்குரியவர்களுக்கு நீதி கோரி வரும் அனைத்து தாய்மார்களுக்கும் நீதி வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்த ஜெனிட்டா, தமிழ்த் தாய்மார்களின் வேண்டுகோளுக்கிணங்க சர்வதேச சட்டப் பொறிமுறையின் ஊடாக குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

"சர்வதேச நீதிப்பொறிமுறை ஊடாக குற்றவாளிகளை கூண்டில் நிறுத்தி நீதியை பெற்றுத்தாருங்கள் என்றுதான் கோரிக்கை விடுக்கின்றோம். ஆனால் அது மறுக்கப்பட்ட நீதியாகவே மாறிக்கொண்டிருக்கின்றது. யுத்தம் முடிவடைந்து நாங்கள் தொடர்ச்சியாக போராடுகின்ற போதிலும் 300ற்கும் மேற்பட்ட தாய், தந்தையர் எவ்வித பதிலும் இன்றி இறந்துள்ளனர். எனவே இந்த சாட்சியங்கள் இறக்கும் முன் நீதியை பெற்றுத்தருமாறு கோருகின்றோம்."

போரினால் மிகவும் அழிவடைந்த முல்லைத்தீவில் மாவட்டச் செயலாளர் அலுவலகத்திற்கு முன்பாக சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி மரியசுரே‘ ஈஸ்வரி தலைமையில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. .

இந்த ஆர்ப்பாட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனும் கலந்துகொண்டார்.

நீதி கேட்கும் தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கத்தின் புலனாய்வு அமைப்புகளால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாகவும், வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் வரையில் மனித உரிமைகள் தினம் ஒரு துக்க நாள் மாத்திரமே எனவும் அவர் வலியுறுத்தினார்.

"சர்வதேச மனித உரிமைகள் நாள் தமிழர்களுக்கானது இல்லை. தமிழர்களுக்கு அந்த உரிமைகள் இல்லை. வடக்கு, கிழக்கிலே அடக்கப்படுகின்றார்கள். அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றார்கள். புலனாய்வுத்துறை அச்சுறுத்துகிறது. பொலிஸார் கைது செய்கின்றனர். இந்த வகையில் இன்றைய மனித உரிமைகள் தினம் அவசியமா? இது துக்க தினம் என்பதை சர்வதேச சமூகத்திற்கு நாம் அழுத்தமாக கூறிக்கொள்கின்றோம். வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு உரிமை கிடைக்கும்வரை மனித உரிமைகள் தினம் துக்க தினம்தான்."

சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று யாழ்ப்பாணத்தில் உள்ள பொது நூலகத்திற்கு முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுக்கு தலைமைத் தாங்கிய யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி சிவபாதம் இளங்கோதை, தங்கள் அன்புக்குரியவர்களின் தலை-விதியைக் கண்டுபிடிப்பதாகக் கூறி அரசாங்கங்களால் நிறுவப்பட்ட அனைத்து நிறுவனங்களும் பயனற்றவை என குற்றஞ்சாட்டினார்.

"இவ்வளவு காலமும் நாங்கள் பார்த்துக்கொண்டுதான் இருந்தோம். அந்த ஆணைக்குழு, இந்த ஆணைக்குழு, அந்த பொறிமுறை, இந்த பொறிமுறை, நல்லிணக்க ஆணைக்குழு, ஓஎம்பி எங்களுக்கு இதுவரையிலும் ஒருவரும் எங்களுடைய பிரச்சினைக்கு தீர்வினை தரவில்லை. நாங்கள் ஐந்து பேரின் விபரங்களைத் தந்தோம் ஓஎம்பிக்கு இவர்களை கண்டுபிடியுங்கள் என்று, அதனை செயற்படுத்தினால் நாங்கள் ஓஎம்பியை நாடுவோம் என்று சொன்னோம். ஆனால் கொடுத்த ஆவணங்களைக்கூட தொலைத்துவிட்டார்கள். பிறகு என்ன ஓஎம்பி, பிறகு என்ன நல்லிணக்கம். எங்களுக்கு ஒன்றும் தேவையில்லை."

உயிருடன் இருக்கும் போதே அரச பாதுகாப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களின் கதி என்னவென? மனித உரிமை அமைப்புக்கள் சர்வதேசத்திடம் கேள்வி எழுப்புவதில்லை என, மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தலைமைத்தாங்கிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் (தொடர்ச்சி 19ம் பக்கம்)


IN MEMORIAM

*The Late Mr and Mrs. T. Paramanantharajah*



**Thiyagarajah (Para) Paramanantharajah**
*Born to Serve: June 11, 1924*
*Called to Eternity: Dec 13, 1984*

**Pooranam (Balesh) Paramanantharajah**
*Born to Serve: March 29, 1932*
*Called to Eternity: Nov 22, 2001*

**Appa and Amma** *every time you fed us - the first scoop that you served us was* **LOVE.** *The second scoop was* **UNITY**. *The third scoop was* **STRENGTH** *and* **COURAGE.** *Many parents do noble things, but both of you have surpassed them all.*

**Appa and Amma** *your affection was a driving force to accomplish and to overcome every hurdle. Whenever we press the replay button the little things that both of you did throughout our lives stands evergreen. When the calamities of the day-to-day routine had got us down, your touch was a cure that no doctor could prescribe.*

**Appa and Amma** *thank you for the sacrifices you have made for us. Thank you for being one of the greatest parents.*

**We Love You Appa and Amma**

*Your Loving Children and Family*

**Siva Para Sivananthan - Nalayini Kumar - Esa Para Esananda - Ganesh Para Ganeshananda**

கனடிய செய்திகள்
Canadian News

# எமது தமிழர்களின் வரலாற்றில் புதிய அமைப்புக்கள் தோல்விகளிலிருந்தே தோற்றம்கொள்கின்றன

## கனடாவில் நடைபெற்ற "அனைத்துலகத் தமிழர் பேரவை" அமைப்பின் அறிமுகக் கருத்தரங்கில் அமைப்பின் இடைக்கால நிர்வாகசபையின் தலைவர் நிமால் விநாயகமூர்த்தி தெரிவிப்பு

எமது தமிழர் அரசியல் மற்றும் சமூகம் சார்ந்த வரலாற்றில் புதிய அமைப்புக்கள் தோற்றம் பெறுவதும், அவ்வாறு தோற்றம் பெறும் அமைப்புக்கள் காலவோட்டத்தில் நிலைக்க முடியாமல் சிதைந்து போவதும் அரசியல், சமூக இயங்குநிலையில் தவிர்க்க முடியாதவையாகும். நமது ஈழ அரசியல் வரலாற்றில் பல கட்சிகள் உருவாகியிருக்கின்றன - பல இயக்கங்கள் தோற்றம்பெற்றிருக்கின்றன.

அதே போன்று, காலத்திற்கு காலம் பல அமைப்புக்கள் முகம் காட்டியிருக்கின்றன. இவ்வாறு தோற்றம் பெற்ற கட்சிகள், இயக்கங்கள், அமைப்புக்களில் சிலது நிலைக்க, பலதோ, காலவோட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் சிதைவுற்றிருக்கின்றன.

இவ்வாறு கடந்த 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கனடாவின் ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற "அனைத்துலக தமிழர் பேரவை"யின் அங்குரார்ப்பணம் மற்றும் அறிமுகக் கருத்தரங்கிற்கு தலைமை தாங்கிய அரசியல் செயற்பாட்டாளரும் கணக்காளருமான நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் தெரிவித்தார். மேற்படி புதிய அமைப்பின் இடைக்கால நிர்வாக சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், அரசியல் சூழ்நிலைகள் மாறுகின்றபோது, குறிப்பிட்ட சூழ்நிலையின் சவால்களை எதிர்கொள்ள முடியாத அமைப்புக்கள் சிதைவடைவது வரலாற்றில் தவிர்க்க முடியாதது. சூழ்நிலைகளே ஒரு ஸ்தாபனத்தின் தேவையை இல்லாமலாக்குகின்றது. அதே சூழ்நிலைதான், புதிய அமைப்புக்களின் தேவையையும் நிர்பந்திக்கின்றது. இந்த யதார்த்தத்தை நாம் புறம்தள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நாம் வரலாற்றில் பின்தங்கியவர்களாகவே இருப்போம்.

ஈழப் போர் முடிவுற்று பதினைந்து வருடங்களாகின்றன. இந்த பதினைந்து வருடங்களில் நாம் எதிர்பார்த்த விடயங்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எந்தவொரு முன்னேற்றத்தையும் எங்களால் நிரூபிக்க முடியவில்லை. பலர் அமைப்புக்களாகவும், குழுக்களாகவும், தனிநபர்களாகவும் பலவாறான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றனர் என்பது உண்மைதான் ஆனாலும் நாம் தொடர்ந்தும் பின்னடைவுகளையே சந்தித்துவருகின்றோம். பதினைந்து வருடங்களில் தாயக அரசியல் சூழலும் மாறிவிட்டது. நடந்து முடிந்த சிறிலங்காவின் பொதுத் தேர்தலில் வடக்கில் தமிழ்த் தேசிய கட்சிகள் பின்னடைவை சந்தித்திருப்பதானது, தாயக மக்கள் தொடர்ந்தும் செயலற்ற தமிழ்த் தேசிய அரசியலின் பக்கமாக அணிதிரள்வதற்குத் தாயாரில்லை என்னும் செய்தியையே வெளிப்படுத்திநிற்கின்றது. இது நம் அனைவருக்குமான சிகப்பு எச்சரிக்கையாகும்.

முள்ளியாவாய்க்காலுக்கு பின்னரான அரசியல் சூழலில் தமிழ் புலம்பெயர் சமூகம்தான், தாயகத்திற்கான அரசியல் பின்தளமாக விளங்கியது. ஆனால் நடைமுறையில் தமிழ் புலம்பெயர் சமூகம் உண்மையிலேயே ஒரு அரசியல் பின்தளமாகத் தொழிற்படுகின்றதா என்னும் கேள்வியை, நாம் நமக்குள் கேட்டுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஏனெனில் ஆரம்பத்தில் புலம்பெயர் சமூகம் தொடர்பில் தாயகத்தில் காணப்பட்ட நம்பிக்கை தற்போது இருப்பதாகக் கூற முடியாது. நிலைமைகள் வேகமாக மாறிவருகின்றன. பதினைந்து வருடகால ஏமாற்றங்களே இதற்கான பிரதான காரணமாகும்.

ஒரு இனப்படுகொலைக்கு ஆளான மக்கள் கூட்டத்தை பிரதிநித்துவம் செய்யும் புலம்பெயர் சமூகம் என்னும் வகையில், நாம் கடந்த பதினைந்து வருடங்களாக எமக்கான நீதியை கோரிவருகின்றோம். ஆனால் இன்றைய உலக அரசியல் ஒழுங்கில் நாம் பாதிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதற்காகவே நீதியை பெற்றுவிட முடியாது. புவிசார் அரசியல் நலன்களுக்கு கட்டுப்பட்டிருக்கும் உலக அரசியல் சுழற்சியில் நீதி இலகுவாக கிடைத்துவிடும் என்று நம்பினால், நாம்தான் தவறாக சிந்திக்கின்றோம் என்று பொருளாகும்.

கடந்த பதினைந்து வருட கால அனுபவங்கள் இதனைத்தான், நமக்கு தெளிவாக உணர்த்தியிருக்கின்றன. எனவே நமது பயணம் என்பது பல தலைமுறைகளை இணைக்கும் அஞ்சல் ஓட்டம் போன்றது. இந்தத் தலைமுறையின் பயணத்தை நாம் தூரநோக்குடனும் அறிவுபூர்வமாகவும் மேற்கொண்டால்தான், தாயகமும் புலம்பெயர் சமூகமும் ஒரு நேர்கோட்டில் பயணிக்க முடியும். தாயக மக்கள் புலம்பெயர் சமூகத்தின் மீதான நம்பிக்கையை கைவிடுவார்களாயின், அதன் பின்னர் நாம் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்தாலும் அவற்றுக்கு எவ்வித பயனும் இருக்கப்போவதில்லை.

தாயகம்தான் நமது அத்திவாரம். இந்த புரிதலிருந்தே நமது ஒவ்வொரு விடயத்தையும் திட்டமிட வேண்டும், முன்னெக்க வேண்டும். அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில், தாயகத்தின் மேம்பாட்டுக்காக அனைத்து வழிகளிலும் நாம் செயலாற்ற வேண்டும். நீதிக்கான எமது பயணத்தை முன்னெடுக்கும் அதே வேளை, சமூக, பொருளாதார முன்னேற்றங்களை கருத்தில்கொண்டு, தாயகத்தின், இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள், நலிவுற்ற சமூகப் பிரிவினர் என அனைத்து தரப்பினரதும் மேம்பாட்டை கருத்தில் கொண்டு நாம் செயற்பட வேண்டும். அதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

தேசியம் என்பதை செயற்பாட்டு தளத்தின் ஊடாக முன்னெடுக்கும் உபாயங்கள் தொடர்பில்தான் நாம் கவனம் கொள்ள வேண்டும். அதே வேளை, ஐரோப்பிய நாடுகளில் வேர்கொண்டிருக்கும் நாம், ஐரோப்பிய மற்றும் அமெரிக்க மைய, சர்வதேச முகவர் அமைப்புக்கள், உலகளாவிய சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து பணியாற்றுவற்கான வாய்ப்பையும், அதற்கான புலமைத்துவ ஆற்றலையும் கொண்டிருக்கின்றோம் ஆனால் அவற்றை நாம் முறையாக கையாண்டிருக்கின்றோமா என்னும் கேள்விக்கு பதில் தேட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

கடந்த பதினைந்து வருடகால அனுபவஙகளை உற்றுநோக்கினால், எமது செயற்பாடுகள் அதிகம் எமக்குள் உரையாடுவதாகவே மட்டுப்பட்டிருக்கின்றது. இந்த நிலைமையை நாம் மாற்றியமைக்க வேண்டும். புலம்பெயர் சமூகத்திடம் பல ஆற்றல்கள் இருக்கின்றன. ஒரு அரசிற்குரிய வாய்ப்புக்கள் எமக்கு இல்லாவிட்டாலும் கூட, மேற்குலக தாராளவாத ஜனநாயக செல்நெறிக்குள் அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன. அந்த வாய்ப்புக்களை நாம் முறையாக பயன்படுத்தினால், சிறிலங்கா அரசும் எங்களை நோக்கி வரக் கூடிய சூழலை ஏற்படுத்த முடியும்.

(தொடர்ச்சி 19 பக்கம்)
















*(18 பக்கத் தொடர்ச்சி)*

தாயகத்துடன் தடையற்ற வகையில் ஊடாடக் கூடிய ஆற்றலுடன் நாம் இருக்க வேண்டிய கட்டாயமானதாகும். தாயகத்திலுள்ள அரசியலாளர்கள், சிவில் சமூக அமைப்புக்கள், புத்திஜீவிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றோடு தடைகளற்ற வகையில், இணைந்து பணியாற்றக் கூடிய சூழலை நாம் பேணிப்பாதுகாக்க வேண்டும். அவ்வாறானதொரு அமைப்புசார் செயற்பாடு எங்களுக்கு கட்டாயம் தேவை. ஏனெனில், தாயகத்திற்கும் புலம்பெயர் சூழலுக்குள் இடையிலான செயற்பாட்டுரீதியான தொடர்புகள்தான் நமது இயங்குநிலைக்கான அஸ்திபாரமாகும். அந்த அஸ்திபாரத்தை பேணிப்பாதுகாத்தால்தான், தாயகம் நம்முடன் நம்பிக்கைமிக்க உறவில் நீடிக்கும். இந்த உறவில் தொய்வுநிலை ஏற்பட்டால் அதன் பின்னர் புலம்பெயர் செயற்பாடுகளுக்குப் பெறுமதியில்லாது போய்விடும்.

கடந்த பதினைந்து வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு விடயங்களை ஆராய்ந்ததன் அடிப்படையிலும் - அதே வேளை, தனிப்பட்டரீதியில் தாயகத்திலும் புலத்திலும் எங்களுக்குள்ள செயற்பாட்டுத் தொடர்புகளின் விளைவாகவுமே இந்த விடயங்களை உங்கள் முன்வைக்கின்றேன்.

இங்கு சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் கடின உழைப்பால் மட்டுமே சாத்தியப்படும். அதே வேளை புலம்பெயர் சூழலிலுள்ள பல்வேறு துறைசார் நிபுனர்கள், செயற்பாட்டாளர்கள், அரசியலாளர்கள் அனைவரும் ஒன்றிணையும் போதுதான் நாம் குறிப்பிடும் இலக்கு நோக்கிப் பயணிக்க முடியும். இந்தப் புதிய அமைப்பானது, அவ்வாறானதொரு பயணத்தை நோக்கிச் செல்வதற்கான ஒரு முதல் நகர்வாகும். சிறுதுளி பெரு வெள்ளம் என்பது போல், இந்த புதிய அமைப்பின் இலக்குடன் தாயகத்தின் மீட்சிக்கான அர்ப்பணிப்புள்ளவர்கள் அனைவரும் கரம் கோர்க்கும் போது, எங்கள் எண்ணம் நிச்சயம் ஈடேறும்.

நாம் தொடர்ந்தும் முயற்சிப்போம். விழ, விழ முயற்சிப்போம். நமது தேச விடுதலைக்காக, தங்களை ஆகுதியாக்கியவர்களின் தியாகம் எங்களுக்கு பக்கபலமாக இருக்கும் என்று தனது தலைமையுரையில் நிமால் விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

மேற்படி புதிய அமைப்பான “அனைத்துலகத் தமிழர் பேரவை” அமைப்பின் அங்குரார்ப்பன வைபவம் டொரென்டோ மாநகரில் கடந்த 8 ஆம் திகதி (December 8, 2024) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. தாயகத்தை நேசிக்கின்ற கனடா வாழ் மக்கள் மாத்திரமன்றி உலகத்தின் பல்வேறு நாடுகளில் இருந்தும் இணைய வழியாகவும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் “அனைத்துலகத் தமிழர் பேரவை” அமைப்புடன் இணைந்து பணியாற்றவும் உறுதியளித்தனர்.

புலம்பெயர் தமிழர்களின் மத்தியில் நூற்றுக் கணக்கான அமைப்புகள் தாயகத்தை நோக்கிய அரவணைப்புக் கரங்களுடன் தமிழ் மக்களின் விடுதலை மற்றும் தாயகத்தின் பொருளாதாரத்தைக் கட்டமைப்பதிலும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பணிகளிலும் அரசியல் கட்டமைப்புக்களை முன்னோக்கி நகர்த்துவதிலும் பணியாற்றி வருகின்றன. இந்த ஒரு பின்னணியில் இன்னும் ஒரு அமைப்பு தேவையா என்ற கேள்விகள் எழும்பலாம்.

2009 ஆம் ஆண்டில் தாயக மண்ணில் யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின் தமிழ் மக்களின் ஒட்டு மொத்த இருப்பையும் கேள்விக்குள்ளாக்கும் நகர்வுகள் மிக வேகமாக முடுக்கி விடப்பட்டுள்ள நிலையில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டிய அவசிய அவசரத் தேவைகளுக் கூடே தமிழ் மக்களின் இனப் பரம்பலை மீளக் கட்டி எழுப்ப வேண்டிய தேவை புலம்பெயர் தமிழ் மக்களிடையே விஷ்வரூபம் எடுத்து நிற்கின்றது. இதற்கும் அப்பால் தாயக “தமிழர் அரசியல்” என்பது திசை மாறியதன் விளைவு இந்த அரசியல்மீது தாயக மக்களை நம்பிக்கை இழக்கச் செய்துள்ளது. இதனால் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் தாயக மண்ணில் நேரடியாக நிலை கொள்ளும் நிலையை உருவாக்கியுள்ளது. இதனை அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இந்த ஒரு பின்னணியில் “அனைத்துலகத் தமிழர் பேரவை” அமைப்பின் வருகை முக்கியத்துவம் பெறுகின்றது என்பதுதான் டொரென்டோ மாநகரில் நடைபெற்ற “அனைத்துலகத் தமிழர் பேரவை” அமைப்பின் அங்குரார்ப்பன வைபவத்தில் கலந்து கொண்டோரினதும் வாழ்த்துக்களைத் தெரிவித்தவர்களினதும் ஏகோபித்த முடிவாக அமைந்தது.

“அனைத்துலகத் தமிழர் பேரவை” அமைப்பின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுள்ள நிமால் விநாயகமூர்த்தி கருத்துரைக்கையில் 2009க்குப் பின் ஒட்டுமொத்த தமிழ்மக்களுக்கும் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இலங்கையில் அண்மையில் நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகள் ஒட்டு மொத்த தமிழ் மக்களுக்கும் சிவப்பு எச்சரிக்கையாகும். “தாயகம்” என்பது தாயகத்தில் உள்ள மக்களுக்கு மாத்திரமல்ல புலம்பெயர் மக்களுக்கும் அத்திவாரமாகும். தாயக மண்ணின் அத்திவாரம் அசைக்கப்படுவதையும் தகர்க்கப்படுவதையும் நாம் அனுமதிக்க முடியாது. குறிப்பாக புலம்பெயர் சமூகம் இதனை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. இதனை இலக்காகக் கொண்டே “அனைத்துலகத் தமிழர் பேரவை” அமைப்பு உருவாக்கம் பெற்றுள்ளது. இதனை முன்னோக்கி நகர்த்த புலம்பெயர் தமிழர்களின் ஒன்றிணைந்த செயற்பாடுகள் அவசியம் என்று குறிப்பிட்டார்.

அமெரிக்காவில் இருந்து வருகைதந்நத சட்டத்தரணி விக்னேஸ்வரன் தனது வாழ்த்துரையில், “போர் மௌனிக்கப்பட்ட பின் தமிழ் மக்கள் தலைமை இன்றி அரசியல் அநாதைகளாக உள்ளனர். தாயக மக்களில் பெரும்பாலானவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியதாக மாறி விட்டது. கடந்தகால தியாகங்கள் மறக்கப்பட்டுள்ளன. தியாகங்கள் செய்தவர்களும் அதற்கு உறுதுணையாக இருந்து தியாகங்களைச் செய்த தாயக மக்களும் புறந்தள்ளப்பட்ட நிலையில் தமிழ்த் தேசியமே கேள்விக்குள்ளாக்பட்டுவிட்டது. இதற்கும் அப்பால் தமிழ்த் தேசியம் என்பது “நாடாளுமன்ற மாகாணசபைகளுக்கான கதிரைகளுக்கான “தேசியமாக” மாறிவிட்டது. இத்தகைய அபாயகரமான போக்கில் இருந்து தாயகமும் தமிழ்த் தேசியமும் காப்பாற்றப்பட்டாக வேண்டும். இதற்கு “அனைத்துலகத் தமிழ் பேரவை” அமைப்பின் வருகை அவசியமாகுகின்றது என்று குறிப்பிட்டார்.

மேற்படி அறிமுகக் கருத்தரங்கில் இணைய வழியூடாகக் கலந்து கொண்டவர்களில் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் தனது வாழ்த்துரையில் ஈழத் தமிழர்கள் ஒன்றிணைய வேண்டியது அவசர அவசியத் தேவையாக இருக்கின்றது. தமிழ் மக்களின் குறிப்பாக தாயக மண்ணின் பொருளாதார சமூக மேம்பாடு பண்பாடு மேம்படுத்தப்படல் வேண்டும். தாயக அரசியல் கபளீகாரம் செய்யப்பட்டுள்ளது. எனவே ஈழத் தமிழர் என்ற வகையில் புலத்திலும் தாயகத்திலும் ஒன்றிணைய வேண்டும். இதனை முன்னெடுக்க “அனைத்துலகத் தமிழர் பேரவை” அமைப்பின்” வருகை அவசியமானது எனக் குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலியாவில் இருந்து கலந்து கொண்ட பேராசிரியர் செல்வநாதன் இளையதம்பி கருத்துரைக்கையில் தமிழர் போராட்டத்தை முன் நோக்கி நகர்த்த ஐந்து முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டார்.

தாயகத்தில் மக்கள் தொகை குறைவடைந்து கொண்டு போகின்றது. மறுபுறம் தமிழர்களின் இனப்பரம்பல் பறி போய்க் கொண்டிருக்கின்றது. மக்கள் தொகை இன்றி போராட்டத்தை நகர்த்த இயலாது. கூடுதலான பிள்ளைகளைப் பெற்றால் பராமரிப்பது கடினம் என்ற நிலையில் தாயக மக்களில் பெரும்பாலானவர்கள் ஒன்று இரண்டு பிள்ளைகளுடன் நிறுத்திக் கொள்கின்றனர். எனவே கூடுதல் பிள்ளைகளைப் பெறுபவர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்படல் வேண்டும். இல்லையேல் இன்னும் இரண்டொரு வருடங்களில் தாயகத் தமிழர் இனவிகிதாசாரத்தில் மூன்றாவது நிலைக்குத் தள்ளப்படுவர்.

பெரும்பாலான இளைஞர்கள் யுவதிகள் வெளிநாடு போக விரும்புகின்றனர். தாயகத்தில் பொருளாதாரம் கட்டி எழுப்பப்படல் வேண்டும். வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படல் வேண்டும். பொதுத் தொழில் கட்டமைப்பு தனியார் தொழிற் துறை என்பன கட்டி எழுப்பப்பட வேண்டும். தாயக விவசாயம் மேம்படுத்தப்பட வேண்டும்.

தாயகக் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். சில பாடசாலைகள் கூடுதலான வளங்களை புலம் பெயர் அமைப்புக்களிடம் இருந்து பெறுகின்றன. பெரும்பாலான பாடசாலைகள் போதிய அடிப்படை வசதிகள் இன்றி காணப்படுகின்றன. இந்த நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டும். ஆரம்பக் கல்வி தொடக்கம் பல்கலைக்கழகக் கல்வி வரை தமிழ் மாணவர்கள் கல்வியைத் தொடர்வதை உறுதி செய்ய வேண்டும்.

தாயக மக்களின் வாழ்வாதாரம் கட்டி எழுப்பப்பட வேண்டும். வதிவிட வசதியை உறுதிப்படுத்துவதுடன் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான அடிப்படை வசதிகளை உருவாக்குவதுடன் மக்கள் நிம்மதியாக வாழ உதவி செய்ய வேண்டும். தாயகத்திற்கு புலம்பெயர் தமிழர்கள் மற்றும் அமைப்புக்களிடம் இருந்து உதவிகள் கிடைக்கின்றன அவை ஒருங்கிணைக்கப்பட வேண்டும். யூதர்கள் போன்று தாயக பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். தாயகப் பொருளாதாரத்தைக் கட்டி ழுப்பினால் மக்கள் தாமாக அரசியல் செய்வர். என்ற தனது தெளிவான உரையில் பல அவசியமான விடயங்களை எடுத்துரைத்தார்.

தமிழ்நாட்டிலிருந்து அங்கு உரையாற்றிய ராமு மணிவண்ணன் தமது வாழ்த்துரையில் “2009க்குப் பின் தமிழர்களின் தலைமையில் ஒரு வெற்றிடம் உள்ளது. வரலாறு கற்றுத்தந்த பாடம் என்ன? இன்றும் ஈழத் தமிழர்கள் தேசிய அடையாளத்தையும் வாழ்வாதாரத்தையும் தேட வேண்டிய நிலையில் உள்ளனர். எனவே ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இணைந்து செல்ல வேண்டியுள்ளது என்று குறிப்பிட்டார்.

கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகன் லோகேந்திரலிங்கம் அவர்கள் தனது வாழ்த்துரையில் தமிழர்கள் மத்தியில் ஒற்றுமை இல்லை என்று தொடர்ச்சியாகப் பேசி வருகின்றோம் ஆனால் இவ்வாறான முக்கிய அமைப்புக்களின் தோற்றும் இடம்பெறுகின்றபோது இந்த அமைப்பின் அங்கத்தவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் மத்தியில் முதலில் ஒன்றுமை அவசியமானது. ஏனென்றால் இந்த அமைப்பை இறுதிவரை கொண்டு செல்வது பாதிக்கப்பட்ட எமது தமிழ்ச் சமூகத்திற்கு முக்கியமான ஒன்றாகும் என்று தெரிவித்து தொடர்ந்து “அனைத்துலகத் தமிழர் பேரவை” அமைப்பின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தையும் ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து லிங்கஜோதி வினாசித்தம்பி ரஜீவ் முத்துராமன்பிரசன்னா பாலச்ந்திரன் பாலச்சந்திரன் நாகலிங்கம் மற்றும் பலரும் கருத்துரை வழங்கினர். வாழ்த்துரைகளை வழங்கினர். இந் நிகழ்ச்சியை கென் கிருபா ஒறுங்கிணைத்து வழிநடத்தினார். இறுதியில் மரியராசா மரியாம்பிள்ளை நன்றியுரை வழங்கினார்.

இந்த அறிமுகக் கூட்டம் கனடா வாழ் தமிழ் மக்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் மத்தியில் நம்பிக்கைகளை ஏற்படுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## (17ம் பக்கம் தொடர்ச்சி) பழைய அரசாங்கங்களின் ...

உறவினர்கள் சங்கத்தின் மன்னார் மாவட்ட தலைவி மனுவெல் உதயச்சந்திரா கேள்வி எழுப்பியிருந்தார்.

“வயது போன காலத்தில் நாங்கள் நிம்மதியா இருக்க வேண்டும். நாங்கள் எங்கள் பிள்ளைகளை நம்பித்தானே ஒப்படைத்தோம். திரும்பி வருவார்கள் என்றுதானே ஒப்படைத்தோம். நாங்கள் உயிரிழந்த பிள்ளைகளுக்காக போராடவில்லையே? உயிருடன் ஒப்படைத்த பிள்ளைகளுக்காகவே போராடுகின்றோம். அதுத் தொடர்பில் மனித உரிமைகளுக்காக செயற்படும் அமைப்புகள் சர்வதேசத்திடம் கேள்வி எழுப்புவதில்லை?”

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் **(TNPF)** தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் மன்னாரில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் சர்வதேச மனித

உரிமைகள் தினத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமது உறவுகளுக்கு நீதி கோரி போராட்டங்களை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு தந்தை செல்வா ஞாபகார்த்த பூங்காவிற்கு

அருகாமையில் ஆரம்பமான ஆர்ப்பாட்ட

பேரணியானது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அமலராஜ் அமலநாயகி தலைமையில் இடம்பெற்றது.

தனது இரத்த உறவினர்களின் கதி என்ன என்பதை உடனடியாக வெளிப்படுத்துமாறு அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்ட அவர், பாதுகாப்பு படையினரின் விசாரணைகளால் தமிழ் தாய்மார்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.

‘‘இந்த இராணுவம், இந்த முகாமில் இருந்துதான் எப்படி உறவுகளை கொண்டுச் சென்றது நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றோம். இதனை விசாரிக்காமல், பாதிக்கப்பட்ட தாய்மாரையே விசாரித்து மன உளைச்சலுக்கு உள்ளாக்கி இன்று நாங்கள் ஒவ்வொருத்தரும் நோய்வாய்ப்பட்டு, இறந்துகொண்டிருக்கின்றோம். இனியும் தாமதிக்காமல் எங்களுக்கான தீர்வை தர வேண்டும். எங்கள் உறவுகளை திருப்பித்தர வேண்டும். இல்லாவிடின் அவர்களுக்கு என்ன நடந்தது என்று எங்களுக்கு அறிவிக்க வேண்டும்.”

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அம்பாறை நகரிலுள்ள மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி கருத்து வெளியிட்ட, அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி தம்பிராசா செல்வராணி காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலில் இலங்கை முதலிடத்தில் இருந்திருக்குமோ என்ற சந்தேகம் எழுவதா குறிப்பிட்டார்.

“எங்களுக்கு உள்ளக பொறிமுறையில் நம்பிக்கையில்லை. எத்தனையோ உள்ளக பொறிமுறைகளை கொண்டுவந்து எங்கள் மீது திணிக்க முயற்சிக்கின்றது. 149,679 பேரை நாங்கள் இறுதி யுத்தத்தில் இழந்து நிற்கின்றோம். அது மாத்திரமல்ல, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பட்டியலில் இலங்கை இரண்டாம் இடத்தில் இருக்கின்றது. சுதந்திரத்திற்கு முன்னர் இருந்து எமது மக்கள் எமது உறவுகள் இறந்ததை வைத்து பார்த்தால். இலங்கை முதலாவது இடத்தில் இருந்திருக்குமோ என்ற கேள்விக் குறி எமக்கு தோன்றுகிறது.”

திருகோணமலை மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி கே.செபஸ்டியன் தேவி தலைமையில், கடந்த டிசம்பர் 10ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய காரியாலயத்திற்கு முன்பாக போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் தாய்மார்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

# இவ்வார ராசிபலன்

## 13-12-2024 வெள்ளி தொடக்கம் 19-12-2024 வியாழன் வரையும்

**மேஷம்:** உண்மைகள் வெளிப்படும் வாரம். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிட்டும். கணினிதுறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். தொழில் அபிவிருத்தி அடையும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். சிக்கனத்தை கையாள வேண்டும். திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. வரவுகள் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பழையகடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் கிடைக்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். சொத்துப் பிரச்சனைத் தீர்வுக்கு வரும். பெண்களுக்கு பெருமை சேரும். பொதுவாழ்வில் புகழ் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விக்னேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 3,2,1,9
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O

**ரிஷபம்:** வரவும், உறவும் வலிமையாகும் வாரம். புத்திரர் வகையில் சந்தோஷம் கூடும். பூமியால் நன்மை உண்டு. குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசும் கரையாது. பந்தாவும் குறையாது. தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். இனிக்கும் வாரம் தான். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடும். அடுத்தவர் தலையீடு அமைதியை கொடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். வியாபாரம் திருப்தி தரும். பொருளாதாரம் உயரும். வாகன நன்மை உண்டு. பயணம் அனுகூலம் தரும். விவேகம் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை மேம்படும். கடன் தொல்லை அகலும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெய்வ பணியில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். வார்த்தைகளில் நிதானம் தேவை. ஆண்களின் அதிகாரம் உயரும். பணவரவு அதிகரிக்கும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஐயப்பன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,N

**மிதுனம்:** முற்போக்கு சிந்தனைகள் உருவாகும் வாரம். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழிலில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. அரசியல் ஆதாயம் தரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். நவகிரஹ அனுகிரஹம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவு குறையும். நட்பு வட்டம் விரிவடையும். விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். புத்தி சாதுர்யம் பெருகும். மனதில் மகிழ்ச்சி கூடும். எதிரிகளால் பலன் கிடைக்கும். நம்பிக்கை துளிர்விடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சிகள் பலன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: நாகாத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 3,2,9,8
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,P

**கடகம்:** நல்லோர்களின் சந்திப்பு கிட்டும் வாரம். திருப்திகள் பெருகும். போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். கடன் தொல்லை நீங்கும். மன சந்தோசம் அதிகரிக்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். விவேகம் வெளிப்படும். வீண் செலவு ஏற்படும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிரியமான காலம். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். வெளியூர் பயணம் நன்மை தரும். புதுத்தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. இனிப்பான செய்திகள் வரும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். கலைத்தொழில் லாபம் தரும். முன்னேற்றம் அதிகரிக்கும். வெற்றிச் செய்தி வரும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் உண்டு. உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப் பிரச்சனைகள் அகலும். உத்தியோகத்தில் ஒற்றுமை விலகும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புக்கள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையை கையாள வேண்டும். பழையகடன் தீரும். மனோபயம் அகலும். குடும்பத்தில் அமைதி பெருகும். பொருளாதார மேன்மை உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். தனவரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். கருத்து வேறுபாடுகள் அகலும். மனைவி உறவு சீராகும். இடமாற்றம் உண்டு. கல்வியில் அக்கறை தேவை. போட்டிகள் அதிகமாகும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'



"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


வழிபட வேண்டிய தெய்வம்: குலதெய்வம், அதிர்ஷ்ட எண்: 2,5,9,4
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,K

**சிம்மம்:** சுபகாரியங்கள் நடக்கும் வாரம். வெகுமானம் கூடும். பழிச்சொல் நீங்கும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவினர்களால் பாதகம் உண்டு. உஷ்ண நோய் ஏற்படும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். கடன் வாங்க நேரிடும். அரசு வகை ஆதாயம் கிட்டும். வெற்றிகள் குவியும். பெருமைகள் தேடி வரும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். சுபச்செய்தி வரும். காதல் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் வரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அடிப்படைத் தேவைகள் நிறைவேறும். ஆரோக்கியம் கூடும். ஆபரணம் வாங்குவீர்கள். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பாக்யவான்களை சந்திப்பீர்கள். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். அரசு உதவிகள் கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். அனுகூலமற்ற திடீர் தனவரவு ஏற்படும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். தீய எண்ணங்கள் விலகும். புதிய வாகனம் சேரும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். விவசாயம் கைக்கொடுக்கும். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்தத்தொழில் அமையும். தொழில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அரசமர பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 1,9,7,5
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,Z

**கன்னி:** வீண் வம்புகள் ஒழியும் வாரம். ஆன்றோர்கள் வாழ்த்து கிட்டும். கொடுக்கல், வாங்கலால் நன்மை சேரும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். கொள்கையில் பிடிப்பு சேரும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். நிர்வாக பொறுப்புக் கூடும். விவசாய விளைச்சலில் பலன் உண்டு. சொந்த தொழில் அமையும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். திருப்புமுனை ஏற்படும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். இடமாற்றம் நன்மை தரும். புதிய உத்தியோகம் அமையும். பழையகடன் தீரும். அணிகலன்கள் சேரும். புதுத்தொழில் அமையும். வாய்ப்புக்கள் தேடி வரும். வாகன மாற்றம் வரும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. வில்லங்கம் தீரும். வீண் செலவு கூடும். பண நெருக்கடிகள் தீரும். பணி ஆர்வம் கூடும். பாதகமான சூழ்நிலை அமையும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலனில் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். திறமைகள் அதிகமாகும். தடைகள் விலகி தொழில் வாய்ப்பு கூடி வரும். நற்செய்தி நாடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,6,8,9
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,V

**துலாம்:** திட்டம் வெற்றி பெறும் வாரம். புத்தாடை சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு. நன்மைகள் அதிகம் உண்டு. நல்லோர்கள் வாழ்த்து உண்டு. நண்பர்கள் சேர்க்கையுண்டு. நிலையான சந்தோஷம் உண்டு. நிலபுலன் சேர்க்கை உண்டு. கடன் தீர்வு உண்டு. காதலில் வெற்றி உண்டு. கடின உழைப்பு உண்டு. கணவன், மனைவி ஒற்றுமை உண்டு. கனவு பலிதம் உண்டு. கவனமுடன் செயல்படவேண்டும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விளைச்சல் அதிகமாகும். விவசாயம் மேன்மை தரும். வெளியூர் பயணம் ஏற்படும். பூர்வீக சொத்து சேரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர். எதிலும் நிதானம் தேவை. பொருளாதாரம் உயரும். மற்றோரின் வாழ்த்துக் கிட்டும். எதிர்பார்த்த ஏற்றம் கிட்டும். கேட்ட இடத்தில் கடன் கிட்டும். காரிய அனுகூலம் கிட்டும். கலைத்தொழிலில் உயர்வு பெறும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதுமுயற்சிகள் பலன் தரும். மன சந்தோஷம் கூடும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை ஆபரணம் சேரும். கடனால் பிரச்சனை தீரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உழைப்பு உயர்வு தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். புதிய அனுபவம் பெறுவீர்கள். இன்பமான செய்தி தேடி வரும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் அதிகமாகும். பெருமைகள் கூடி வரும். நிதி நிலைமை சீராகும். அரசு பணியில் மாற்றம் வரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 2,1,9,7
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,X

**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்து சேரும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். வழக்குகள் சாதகமாகும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மைத்தரும். அளவான பேச்சு நன்மைத்தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டு கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெருமைகள் கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். தெய்வப்பணியில் ஈடுபடுவீகள். கோதுமை தானம் குலவிருத்தி தரும். உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு மதிப்பெண் உயரும். எண்ணிய காரியம் கூடும். எதிர்பாராத லாபம் தரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரிடும். பதவியில் உயர்வு வரும். இடமாற்றம் நன்மை தரும். வெற்றிநிலைத் தொடரும். குடும்ப கௌரவம் கூடும். நன்மதிப்பு உயரும். பாராட்டு கூடும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சி வெற்றித் தரும். பெரியத் திருப்பம் ஏற்படும். கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றித்தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மைதரும்.


(தொடர்ச்சி 22 பக்கம்)

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
**1124**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம், மலையகம்

“மின்னாயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்ற
துன்னாள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்குமாய் முடிவாய முதல்விதன்னை
ஊன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றில்லையே.”

திரு. சுப்பாபிள்ளை அவர்களின் பின்னர், நொத்தாரிஸ் முருகேசு என்பவர் இக்கோயில் நிர்வாகத்தை நடத்தியுள்ளார். ஆரம்பகாலத்தில் இக்கோயில் பூசைகளை, ஒப்பனைக் கலைஞரும், பின்னர் பண்டாரங்களும் செய்து வந்துள்ளனர். படிப்படியாக ஆலயம் வளர்ச்சிபெற்றதைத் தொடர்ந்து, இந்நிலையிலே மாற்றம் ஏற்பட்டு, பிராமண அர்ச்சகர்கள் பூசைசெய்ய நியமிக்கப்பட்டனர். இக்காலத்தில் இவ்வாலயத்திலே நித்திய பூசைகள் மட்டுமே நடைபெற்றுள்ளது. பின்னர், படிப்படியாகத் திருவிழாக்களும் நடத்தப்பட்டு, சப்பரத்தேர் உலாவரும் வழக்கம் காணப்பட்டுள்ளது. 1934 ஆம் ஆண்டளவில் சப்பரத்தேர் முறையை மாற்றி, விநாயகர், சிவனம்பாள், முருகன் ஆகியோருடன் இரதோற்சவம் நடத்தப்பட்டது.

இவ்வாறு படிப்படியாக வளர்ச்சி பெற்றுவந்த மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், திரு. க. குமாரசாமி என்பவர் நிர்வாகத் தலைமையில் பல மாற்றங்களைப் பெற்றது. 1955ம் ஆண்டளவில் இவ்வாலயத்தின் நிர்வாகதலைமைப்பொறுப்பையேற்ற திரு. க. குமாரசாமி அவர்கள், இராஜகோபுரம் உட்பட பல ஆலய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். 1958 ஆம் ஆண்டு பழைய கட்டிடம் முற்றுமுழுதாகத் திருத்தி அமைக்கப்பட்டது. பின்னர் மகாமண்டபம், அர்த்தமண்டபம், மூலத்தானம் போன்றவை அமைக்கப்பட்டன. 1960களில் மூலத்தானத்திற்குரிய கோபுரமும் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. 1963 இல் சந்திரசேகரர், சண்டேஸ்வரி ஆகிய மூர்த்திகளுக்குத் தனித்தனி கோயில்களும், நடராஜப்பெருமான் கோயில், வயிரவர் கோயில் என்பனவும் நிர்மாணிக்கப்பட்டன. 1968 ஆம் ஆண்டு சாத்திரமுறைப்படியான கொடிமரம், தாமிரஉலோகத்தால் செய்யப்பட்டு, மேலே வெள்ளிப்பூச்சுப் பூசப்பட்டு நிறுவப்பட்டது. இவ்வாண்டிலேயே வசந்தமண்டபமும், பின்சுற்றுமதிலும் அமைக்கப்பட்டன. ஆலயத்தினுள்ளே ஆனைமுகன், கருப்பண்ணசாமி, மதுரைவீரர், பஞ்சமுகவிநாயகர், முருகப்பெருமான், ஸ்ரீ விஷ்ணுவின் அனந்தசயனம், சரஸ்வதி, துர்க்காதேவி, லட்சுமி, நவக்கிரகங்கள், மீனாட்சிஅம்பிகை, நந்தி, நடராஜர் சந்நிதானம், நான்கு நாயன்மார்க்குரிய சந்நிதானங்கள் ஆகியனவும் சாத்திர முறைப்படி அமைக்கப்பட்டன. ஆலயத்தினுள்ளே பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் சிவலிங்கம், காசியிலிருந்து கொண்டுவரப்பட்டது.


குடிலாகக் காணப்பட்டு, பின் கற்கோயிலாக மாற்றம்பெற்ற இவ்வாலயத்தை தேவஸ்தான நிலைக்கு உயர்த்துவது இராஜகோபுரமாகும். மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு, 1973 ஆம் ஆண்டு இராஜகோபுரம் அமைக்கப்பட்டு, கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1977 ஆம் ஆண்டு ஸ்ரீ முத்துமாரியம்மனுக்குச் சித்திரத்தேர் அமைத்து, வெள்ளோட்டம் விடப்பட்டது. 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின்போது அற்புதமான இச்சித்திரத்தேரும், ஏனைய இரதங்களும் இனத்துவேசம் கொண்டோரால் எரியூட்டப்பட்டதோடு, கல்யாணமண்டபம் உட்பட ஏனைய பகுதிகளும் சேதமாக்கப்பட்டு, பெரும் அழிவுகள் ஏற்பட்டது. இந்நிலையிலே படிப்படியாக வளர்ச்சிபெற்ற மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலே பூசை, வழிபாடுகள் நடைபெறமுடியாத நிலை ஏற்பட்டது.

இச்சூழ்நிலையில், மீண்டும் ஆலயத்தைக் கட்டியெழுப்பும் உத்வேகத்துடன், திரு. இராஜரட்ணம் என்பவர், தலைமைப்பொறுப்பேற்றுச் செயற்பட்டார். இவர்காலத்தில் பல திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1992 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், திரு. த. மாரிமுத்துச்செட்டியார் என்பவர், மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அறங்காவல் சபைத்தலைவர் பொறுப்பை ஏற்றார். தமிழ் மக்கள் மட்டுமன்றி சிற்கள மக்களும், அம்மன் வழிபாட்டிலே ஈடுபாடு கொண்டவர்கள். அம்மக்களும் இவ்வாறான ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்துவது வழக்கம். அறங்காவல் சபைத்தலைவர் பொறுப்பேற்ற திரு. த. மாரிமுத்து அவர்கள் இந்துமக்களோடு ஏனைய இனத்தவரையும் அரவணைத்து, எரியூட்டப்பட்ட சித்திரத்தேரையும், ஏனைய இரதங்களையும் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றார்.

திரு. த. மாரிமுத்து அவர்களோடு ஆலயத்திருப்பணியில் அக்கால செயலாளராக விளங்கிய, திரு. சண்முகம் சந்திரசேகரம் அவர்களும் ஈடுபாடு கொண்டு எரியூட்டப்பட்ட ஆலயத்தை மீளக்கட்டியெழுப்புவதில் பெரும்பணியாற்றியுள்ளார். 1999 ஆம் ஆண்டு முதல் திரு. சண்முகம் சந்திரசேகரம் அவர்கள், மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அறங்காவல் சபைத்தலைவராகப் பணியாற்ற ஆரம்பித்தார். இவர் காலத்தில் வடக்கு இராஜகோபுரம், வடக்குவெளிவீதி என்பனவும், அறநெறிப்பாடசாலையும் அமைக்கப்பட்டது.

இவ்வாறாக, காலத்திற்குக் காலம் இந்துஆலயங்கள் பல்வேறு சூழ்நிலைகளில் அழிக்கப்பட்டு வந்தபோதிலும், மீண்டும் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளமை வரலாறு கூறும் உண்மையாகக் காணப்படுகின்றது. பல அழிவுகளைச் சந்தித்தபோதிலும், மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், மீண்டும் மலையகத்தின் தலைசிறந்த ஆலயமாக உருப்பெற்றுள்ளமைக்கு, அன்னைமீது மக்கள் கொண்ட ஆத்மார்த்தமான நம்பிக்கையும், அன்னையின் கருணையுமே காரணம் எனின் மிகையாகாது.

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மனின் கருணையாலும், அற்புதங்களாலும் இவ்வாலயம், பல்லினத்தவர்களாலும் வணங்கப்படும் ஆலயமாக விளங்குகின்றது. அத்தோடு எதிர்காலச் சந்ததியினருடைய ஆன்மீக முன்னேற்றங் கருதி, பல அறப்பணிகளும் இவ்வாலயத்திலே நடைபெற்று வருகின்றது. மலையகத்திலுள்ள திருத்தலங்களிலே தலைசிறந்த சக்திதலமாக விளங்கும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் அருளும், பெருமையும் கொண்ட பழம்பெரும் ஆலயமாக விளங்குகின்றது.



# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** தனவரவு உற்சாகம் தரும். பணம் புரளும். பூமியால் லாபம் உண்டு. கூட்டுத்தொழில் நன்மை தரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 6,9,1,2
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,J




**தனுசு:** மனைவியால் மகிழ்ச்சி பொங்கும் வாரம். தோல்வி நிலை மாறும். தொழில் வர்த்தகம் விரிவடையும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாயம் நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலிதமாகும். குதூகலப் பயணம் உண்டு. குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். பணியில் பாராட்டு கிட்டும். ஆரோக்யம் பாதிக்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. நிதானம் தேவை. வேலை பளு கூடும். பொருள் நஷ்டம் ஏற்படும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். ஒப்பற்ற பலன் சேரும். திருப்பங்கள் நிறைந்த காலம். பாதிப்புக்கள் ஒழியும். சோதனைகள் தீரும். ஆற்றல் வெளிப்படும். சுயத்தொழில் லாபம் தரும். தனவரவு சீர்படும். தகுதி மேம்படும். தாயார் உடல்நிலை சரியாகிவிடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சிக்கன நடவடிக்கை தேவை. தொழில் மந்த நிலை காணும். பணியில் செல்வாக்கு சேரும். தடைப்பட்ட நிலை மாறும். உத்தியோக மாற்றம் ஏற்படும். நலிந்த தொழில் மேன்மை தரும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயத்தில் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பணவிரயம் உண்டு. புதிய சிந்தனை உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 3,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**மகரம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். காலணிகள் காணாமல் போகும். புதிய பொருள் சேரும். காதல் எண்ணம் உருவாகும். உடல்சோர்வு ஏற்படும். கடன் பிரச்சனைகள் தீரும். கல்வியில் தடை ஏற்படும். விளையாட்டுத்துறையில் லாபம் தரும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். மன அமைதி கூடும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். ஏற்றமான தருணம் அமையும். விவசாயிகள் பயன்பெறுவர். தெய்வீகப் பற்று அதிகரிக்கும். வீண்செலவு குறையும். திடீர் பயணம் தடைப்படும். பணியில் நிரந்தரம் உண்டாகும். புதிய நட்பினால் பலன் உண்டு. புத்திர வழியில் கவனம் ஏற்படும். அதிருப்தி அதிகரிக்கும். அமைதியாக இருப்பது நல்லது. போட்டிகள் நீங்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். பாசம் அதிகரிக்கும். பெருமைகள் சேரும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். அன்பினால் காரியம் நிறைவேறும். படிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் முன்னேற்றம் அடைவீர். பக்குவமான பேச்சு அவசியம். பணப்பற்றாக்குறை தீரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். காதல் எண்ணம் நிறைவேறும். சகோதரியால் சஞ்சலம் உண்டு. மனம் மகிழும் காலம். மனச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நிம்மதி உண்டாகும். மன சஞ்சலம் குறையும். கமிஷன் தொழிலில் கவனம் தேவை. கணவன், மனைவி இடைய நல்ல உறவு ஏற்படும். உடல் நோயிலிருந்து விடுதலையாவீர். உடன் பிறந்தவரால் அன்பு அதிகரிக்கும். உடல் பொலிவு உண்டு. பற்றாக்குறை நீங்கும். பணவரவு கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகள் தொல்லை உண்டு. புண்ணிய ஸ்தலம் பயணம் ஏற்படும். உடல் உபாதை நீங்கிவிடும். காரியம் இழுபறியாகும். முயற்சி பலன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வான்தேவதை, அதிர்ஷ்ட எண்: 4,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,H




**கும்பம்:** ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும் வாரம். முடிவுகள் சாதகமாகும். உறவினரால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. கால்நடையால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. பணவரவு தாமதமாகும். பாராட்டு பெருகும். உடல்சோர்வு நீங்கும். வீண் விரயம் அதிகமாகும். சுபவிரயம் ஏற்படும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். ஆபரணச்சேர்க்கை உண்டு. சந்தோஷம் பெருகும். மாணவர் பாராட்டுப் பெறுவர். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மனக்கலக்கம் உருவாகும். மற்றவர்க்கு உதவி செய்வீர். தந்தை நலம் கூடும். அனுகூலமான போக்கு ஏற்படும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். குடும்ப சந்தோஷம் கூடும். உண்மைகள் வெளிப்படும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குழந்தைகள் நலனில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். சொல்லில் கவனம் தேவை. விபரீத போக்கு மாறும். சிக்கனத்தை கையாள வேண்டும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். மின்சாரத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வீடு வாங்கும் யோகம் உண்டு. திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,5,9,2
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S

**மீனம்:** நலமும், வளமும் நாடி வரும் வாரம். பெருமைகள் கூடும். பிரபலங்களை




சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பார்ப்புக்கள் உருவாகும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பிள்ளைகளால் சந்தோஷம் அதிகரிக்கும். அரசியல் லாபம் தரும். மரத்தொழில் லாபம் பெறுவீர். மாமூலான வளர்ச்சி சிறக்கும். வேலைபளு அதிகமாகும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். மின்சாரத்தில் கவனம் தேவை. வரவுகள் அதிகரிக்கும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபாரம் அபிவிருத்தி ஏற்படும். பொறுப்புகள் கூடும். பொறாமைகள் விலகும். அரசாங்க அனுகூலம் கூடும். எதிலும் எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. காதல் எண்ணம் ஈடேறும். தொழில் வளர்ச்சி கூடும். நிதி நிலைமை சீராகும். தோற்றப் பொலிவு கூடும். விவசாயம் லாபம் தரும். புது நண்பரால் அதிகப்பலன் கூடும். பிறர்க்கு உதவும் மனப்பான்மை ஏற்படும். எண்ணிய காரியங்களில் பெருமிதத்துடன் செயல்படுவீர். ஆனந்த வாழ்வு உண்டாகும். சுபிட்ஷங்கள் பெருகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் பெரிய பலனை அடைவீர். உலோகத் தொழில் உயர்வு தரும். உறவினர் வருகையால் பலன் உண்டு. கல்விச்செலவு உண்டு. நண்பர்கள் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சியால் பலன் பெறுவீர். பொருளாதார முன்னேற்றம் உயரும். வீண் வம்பு விலகும். புதிய தொழில் அமையும். உடல் சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தனதேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,R

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஜனாதிபதி தலைமையிலான ஆட்சியாளர்கள் சர்வதேச மனித உரிமை தினத்தை நினைவு கூறுவதற்கு தகுதி இல்லை— அருட்தந்தை மா.சக்திவேல்

கனகராசா சரவணன்



இலங்கையில் சட்ட ரீதியில் மனித உரிமை மீறலுக்கும் அதனை செய்பவர்களுக்கு பாதுகாப்பளிக்கின்ற பயங்கரவாத தடை சட்டம் உருவாக்கப்பட்டு கடந்த 45 ஆண்டுகளாக ஆட்சியாளர்கள் பாதுகாத்து வருகின்றனர். அதேவேளை கடந்த காலத்தில் இப்பேர்து ஆட்சி பீடம் ஏறிய ஜே.வி.பியும் இச்சட்டத்தால் பாதிக்கப்பட்டி ருந்தபோதும் அதற்கு எதிராக குரல் எழுப்பாமல் இருந்ததோடு அந்த சட்டத்தின் பாதுகாப்பில் ஆட்சி செய்யவரும் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தலைமையிலான ஆட்சியாளர்கள் சர்வதேச மனித உரிமை தினத்தை நினைவு கூறுவதற்கு தகுதி இல்லை என சமூக நீதிக்கான அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்தார்.

10ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை சர்வதேச உரிமைகள் தின நினைவு தினத்தையிட்டு ஊடக அறிக்கை ஒன்றை வெளிட்டுள்ளார்.

பயங்கரவாத தடை சட்டம் இதனை கடந்த 45 ஆண்டுகளாக ஆட்சியாளர்கள் பாதுகாத்து வருகின்ற சூழ்நிலையில் தேசிய மக்கள் சக்தியான மக்கள் விடுதலை முன்னணியும் இச்சட்டத்தால் கடந்த காலத்தில் பாதிக்கப்பட்டிருந்தாலும் இச் சட்டத்திற்கு எதிராக குரல் எழுப்பாமல் இருந்ததோடு தற்போது இதற்கு ஒத்த புதிய சட்டத்தை வரையும் வரை தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தின் பாதுகாப்பில் ஆட்சி செய்ய விரும்புவது மனித உரிமை மீறலாகும்.

இச்சட்டத்தின் கரு தமிழர்கள் பயங்கரவாதிகளாக்கப்பட்டார்கள், சிறைக்குள் தள்ளப்பட்டார்கள், தண்டனை காலத்துக்கும் அதிகமாக சிறைக்குள் நாட்களை கழித்துக் கொண்டிருக்கின்றனர். அரசியல் கைதிகளாக இவர்களை ஏற்றுக் கொள்வதும் அரசியல் தீர்மானம் எடுத்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதும் மக்கள் குரலாகவும். மக்களின் வாழ்வுரிமை காக்க புறப்பட்டவர்களை பயங்கரவாதிகளாக்கி தொடர்ந்து சிறையில் அடைத்து வைத்திருப்பது அடிப்படை மனித உரிமை மீறல்.

அதேவேளை நடந்து முடிந்த யுத்த காலப்பகுதியில் நீதிக்காக குரல் எழுப்பியோர், அரசியல் செயற்பாட்டாகள், ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டனர், அச்சுறுத்தப்பட்டனர், தாக்கப்பட்டனர், காணாமலாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். இவர்களுக்கான நீதி இன்றும் கிட்டவுமில்லை. நீதிவிசாரனணயும் இல்லை. எதிர்பார்க்கும் நீதி கிட்டும் என்பது தொடர்பிலும் நம்பிக்கை இல்லை. இத்தகைய சூழ்நிலைக்குள் தள்ளுவதும் மனித உரிமை மீறல் என கருதுகின்றோம்.

யுத்த காலத்தில் மீறப்பட்ட மனித உரிமை மீறல்கள் உள்ளன. படையினரிடம் கையளிக்கப்பட்டு காணமலாக்கப்பட்டோர் ஆயிரமாயிரம் பேர் உள்ளனர். அதற்கு இன்று வரை விசாரணை இல்லாதிருப்பது மட்டுமல்ல விசாரணை ஆணை குழுக்கள் என்று மக்களை ஏமாற்றி பாதிக்கப்பட்டவர்களை மன உளைச்சலுக்குள் தள்ளுவதும்.

மன உளைச்சலுக்குள் உள்ளாக்கப்பட்டு வேதனையில் இயற்கை மரணம் அடைந்தாலும் அம்மரணங்களை எல்லாம் யுத்தத்தோடு தொடர்புபட்ட கொலைகள் என்று கூற வேண்டும். இத்தகைய மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து இருக்கையில் சர்வதேச மனித உரிமைகள் தினம் என்பது பாதிக்கப்பட்டவர்களுக்கு வேதனைக்குரிய ஒரு கரும் நாளாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது.

விசாரணைகள் நீண்ட காலமாக இழுத்துக் இழுத்தடிக்கப்படுவதும், குற்றவாளிகள் அடையாளப்படுத்தப்பட்டாலும் அரச தலையீட்டின் காரணமாக அவர்களுக்கு விடுதலை அளிப்பதும், சாட்சிகளை மறைப்பதும், குற்றவாளிகளாக அடையாளப்ப டுத்தப்பட்டோருக்கு உயர் பதவிகள் அளிப்பது நாட்டிலே கடந்த காலம் முழுவதும் நிலவியது. அது உரிமை மீறலுக்கு ஆர்ச் அங்கீகாரம் கொடுக்கும் இழிவான செயலாகும்.

நாட்டில் இதுவரை 20க்கும் அதிகமான சமூக புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கொழும்பு துறைமுக நகருக்கு அண்மையில் உயர் பாதுகாப்பு வளையத்திலும் சமூகப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவும் உயிர் வாழும் உரிமையை பறித்ததற்கு இன்னும் ஒரு சாட்சியாகும்.

எனவே சர்வதேச மனித உரிமைகள் தினம் என்பது ஒரு கேலிக்கூத்தாக அமைவதை சமூக செயற்பாட்டார்கள் விரும்பவில்லை. பாதிக்கப்பட்டோருக்கு நீதி என்பது உண்மையை கண்டுபிடிப்பதுமாகும். அது மட்டுமல்ல அதற்கு பின்னால் உள்ள அரசியல் வெளிகொண்டுவரப்பட்டு அரசியல் நீதியும், சமூக நீதியும் நிலை நிறுத்தப்படல் வேண்டும். அவ்வாறு நிறுத்தப்பட்டால் மட்டுமே சர்வதேச மனித உரிமை தினம் அர்த்தமுள்ளதாக அமையும். ஐ.நா மனித உரிமை பேரவை அதற்கான ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


MORTGAGE
FINANCIAL SOLUTIONS
RESIDENTIAL
COMMERCIAL
INDUSTRIAL
CONSTRUCTION
VACANT LAND
Providing the best future for your best living Without risks
Our Service
MORTGAGE
RESIDENTIAL- COMMERCIAL
• Purchase
- Builder Purchase
- MLS Purchase
- Private Purchase
• Refinance
• Renewal
• Equity line of Credit
Contact Us Today
NESAN
Subramaniam
416-908-5656
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada
www.nesan.ca
WE DEAL WITH ALL BANKS
Powered By
MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330
Scotiabank
TD Canada Trust
NATIONAL BANK
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
Manulife
Desjardins
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

உதயம் 1497 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 13, 2024

# எமது தமிழர்களின் வரலாற்றில் புதிய அமைப்புக்கள் தோல்விகளிலிருந்தே தோற்றம்கொள்கின்றன

## கனடாவில் நடைபெற்ற "அனைத்துலகத் தமிழர் பேரவை" அறிமுகக் கருத்தரங்கில் அமைப்பின் இடைக்கால நிர்வாகசபையின் தலைவர் நிமால் விநாயகமூர்த்தி தெரிவிப்பு



எமது தமிழர் அரசியல் மற்றும் சமூகம் சார்ந்த வரலாற்றில் புதிய அமைப்புக்கள் தோற்றம் பெறுவதும், அவ்வாறு தோற்றம் பெறும் அமைப்புக்கள் காலவோட்டத்தில் நிலைக்க முடியாமல் சிதைந்து போவதும் அரசியல், சமூக இயங்குநிலையில் தவிர்க்க முடியாதவையாகும். நமது ஈழ அரசியல் வரலாற்றில் பல கட்சிகள் உருவாகியிருக்கின்றன - பல இயக்கங்கள் தோற்றம்பெற்றிருக்கின்றன - அதே போன்று, காலத்திற்கு காலம் பல அமைப்புக்கள் முகம் காட்டியிருக்கின்றன. இவ்வாறு தோற்றம் பெற்ற கட்சிகள், இயக்கங்கள், அமைப்புக்களில் சிலது நிலைக்க, பலதோ, காலவோட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் சிதைவுற்றிருக்கின்றன".

இவ்வாறு கடந்த 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கனடாவின் ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற "அனைத்துலக தமிழர் பேரவை" யின் அங்குரார்ப்பணம் மற்றும் அறிமுகக் கருத்தரங்கிற்கு தலைமை தாங்கிய அரசியல் செயற்பாட்டாளரும் கணக்காளருமான நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

# ரொறன்ரோவில் நடைபெறும் "நகைக் கடைகள் கொள்ளைகள்" தொடர்பான கருத்தரங்கை ஏற்பாடு செய்த கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம்



கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியான முறையில் ரொறன்ரோ பெரும்பாகத்தில் பெருமளவில் நடைபெறும் "நகைக் கடைகள் கொள்ளைகள்" எமது மக்கள் மற்றும் ஏனைய வர்த்தக நிறுவனங்கள் ஆகியவை மத்தியில் சஞ்சலத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளன என்பது தெளிவாகத் தெரிந்த ஒரு விடயமாகும்.

எனவே இந்த "நகைக் கடைகள் கொள்ளைகள்" தொடர்பாக மக்கள் மத்தியில் உள்ள கருத்துக்கள் மற்றும் அச்ச உணர்வு பற்றிய காவல்துறை அதிகாரிகள் மற்றும் மத்திய - மாகாண மற்றும் மாநாகராட்சி அரசுகளின் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளடங்கிய பலரை அழைத்து இது தொடர்பான பயனுள்ள கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்த கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் மக்களின் பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டது.

டிசம்பர் மாதம் 6ம் திகதி வெள்ளிக்கிழமையன்று மார்க்கம் நகரில் அமைந்துள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்த பயனுள்ள கலந்துரையாடலுக்கு சம்மேளனத்தின் தலைவரும் கணக்காளருமான அரி அரிகரன் அவர்கள் தலைமை வகித்தார்.

மேற்படி கருத்தரங்கில் பாதிக்கப்பட்ட நகைக் கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள். பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். ஒன்றாரியோ மாகாண அரசின் சார்பில் துணை அமைச்சரும் மாகாண அரசின் உறுப்பினருமான விஜேய் தணிகாசலம் மற்றும் பல அரசியல் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அத்துடன் யோர்க் பிராந்தியம் மற்றும் ரொறன்ரோ பெரும்பாகம் போன்ற பிரிவுகளில் பணியாற்றும் தமிழ் பேசும் காவல்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

மாகாண அரசின் சார்பில் கலந்து கொண்ட துணை அமைச்சர் விஜேய் தணிகாசலம் அங்கு உரையாற்றுகையில் தற்போது ஒன்றாரியோ மாகாணத்தில் மிகுந்த தீவிரமாக நடைபெற்றுவரும் வாகனத் திருட்டு மற்றும் நகைக் கடைகள் மீது தாக்குதல்களை நடத்தி கொள்ளையடிப்பது போன்ற குற்றச் செயல்களை கட்டுப்படுத்த தங்கள் அரசாங்கம் மில்லியன் கணக்கான டாலர்களை ஒதுக்கியுள்ளதாகவும் ரோந்துப் பணிகளுக்காக ஹெலிகெப்டர்களைக் கூட கொள்வனவு செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

ஆனால் அங்கு சமூகமளித்தவர்களில் பலர் காவல்துறையின் வேகம் இவ்வாறான குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் இல்லாதது மக்கள் மத்தியில் மிகுந்த விரக்தியையும்



வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளதாக ஒன்று பட்டுத் தெரிவித்தனர்.

அவ்வாறான கேள்விகளுக்கும் கருத்துக்களுக்கும் பொலிஸ் அதிகாரிகளும் தங்கள் பக்கத்தில் உள்ள நியாயங்களையும் நீதித்துறையில் சில பின்னடைவுகளையும் மறைமுகமாகத் தெரிவித்தனர்.

அன்றைய கருத்தரங்கில் பயனுள்ள தீர்வுகள் எட்டப்படாவிட்டாலும் இந்த முயற்சியை மேற்கொண்ட கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்திற்கு அனைத்து தரப்பினரும் நன்றியைத் தெரிவித்தனர்.

# வெள்ள உதவிகள் வழங்கினாலும் தமிழ் ஆர்வலர்களுக்கு இலங்கை அரசின் "புலனாய்வுத்துறை அச்சுறுத்தல்"




அண்மையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவிகளை வழங்கும் உள்ளூர் வெகுஜன அமைப்புக்களை அரச புலனாய்வுப் பிரிவினர் அச்சுறுத்துவதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைக் கண்டறியும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தலைவி ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் வடக்கிலும் கிழக்கிலும் பெய்த கடும் மழையினால் பாதிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் பிரதேச மக்களுக்கு உதவிகளை வழங்கும் போது தமிழ்த் தாய்மார்களும் அச்சுறுத்தலுக்கு உள்ளானதை மிக அண்மைய உதாரணமாக, முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி மரியசுரே஁ ஈஸ்வரி சுட்டிக்காட்டுகின்றார். (தொடர்ச்சி 7ம் பக்கம்)

# Dominion Lending Centres and The Guardian Home Realty Inc இணைந்து நடத்திய வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் விழா



**Dominion Lending Centres and The Guardian Home Realty Inc** இணைந்து நடத்திய வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் விழா கடந்த 7ம் திகதி சனிக்கிழமையன்று **Scarborough Convention Centre** மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நிறுவனங்களின் உரிமையாளர் சுதர்சன் நடராஜாகினி அன்னராசா தம்பதி தமது குழுவினருடன் இணைந்து மேற்படி விருதுகள் வழங்கும் விழாவை வெற்றிகரமாகவும் அழகுறவும் ஏற்பாடு செய்திருந்தார்கள். (தொடர்ச்சி 6ம் பக்கம்)